பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 28 செவ்வாய்க்கிழமை (11.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :135





மனிதநேயப் பணியாளர்களான பிரதீப்குமார், பதமநாபன்

படங்கள்: பிரபா



துயரத்தில்...

# இராணுவ வாகனம், கியூடெக் வான் மிருசுவிலில் கண்ணியில் சிக்கிச் சேதம்

## பணியாளர்கள் இருவர் பலி; இருவர் காயம் படைத்தரப்பில் ஐவர் மரணம்; ஒருவர் காயம்

மிருசுவில்,ஏப்ரல்11

**ஏ-9 வீதியில் மிருசுவிலில் உள்ள இராணுவச் சோதனை தடை நிலைக்கு சமீபமாக நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ வாகனம் ஒன்றும், தொண்டு நிறுவனத்தின் 'ஹை-ஏஸ்' வானும் சிக்கிச் சேதமடைந்திருந்தன.**

**படையினர் தரப்பில் ஐவரும், தொண்டு நிறுவனப் பணியாளர்கள் இருவருமாக ஏழு பேர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர். வேறு இரு பணியாளர்கள் காயமடைந்தனர். படையினர் தரப்பிலும் ஒருவர் காயமடைந்தார்.**

ஏ-9 வீதியில் படையினரை ஏற்றிச் சென்று கொண்டிருந்த இராணுவ 'டபிள்கப்' வாகனத்தை இலக்கு வைத்து இந்த கிளைமோர் கண்ணி வெடிக்க வைக்கப்பட்டிருக்கின்றது. எனினும், அந்தச் சமயம், இராணுவ வாகனத்துக்கு அருகே சென்றுகொண்டிருந்த தொண்டு நிறுவனத்தின் வாகனமும் கண்ணியில் சிக்கி சிதறுண்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவரின் வன்னிக்கான விஜயம் திடீர் ரத்து

கிளிநொச்சி,ஏப்.11

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் இன்று வன்னிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் நேற்றிரவு திடீரென ரத்துச் செய்யப்பட்டது.

வடக்கு - கிழக்கில் தற்போது உருவாகியுள்ள நெருக்கடி நிலை குறித்து ஆராயவென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் உல்ப் ஹென்றிக்ஷன் இன்று வன்னிக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருந்தார்.

இதனிடையில் - யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஆராய கண்காணிப்புக்குழுவின் தலைவர் இன்று (செவ்வாய்) யாழ்ப்பாணம் விஜயம் செய்ய

(14ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய கல்விச்சுடரில்

இரசாயனவியல் வினாத்தாள், இணைந்த கணிதம் விடைக்குறிப்புகள் என்பன வெளிவரும்.

## மக்கள் படை வருத்தம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற கிளைமோர்த் தாக்குதலுக்கு உரிமைகோரியுள்ள யாழ். பொங்கியெழும் மக்கள் படை அதில் சிக்கி உயிரிழந்த மனித நேயப் பணியாளர்களுக்கு அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, யாழ். பொங்கியெழும் மக்கள்படை நேற்றிரவு விடுத்த அறிக்கை வருமாறு:-

மனிதநேயப் பணியாளர்களின் கொலைக்கு வருந்துகிறோம். இன்று மாலை (திங்கள்) மிருசுவில் பகுதியில் இராணுவத்தினர் மீது எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது எதிர்பாராதவிதமாக கியூடெக் நிறுவனத்தின் மனிதநேயப் பணியாளர்கள் இருவர் சிக்குண்டு உயிரிழந்ததையிட்டு நாம் மிகுந்த வேதனையடைகின்றோம்.

இவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, இறந்தவர்களது குடும்பங்களுக்கு பொங்கியெழும் மக்கள்படை சார்பாக எமது

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் விக்கியின் இறுதி நிகழ்வு இன்று மாலை திருகோணமலையில்!

### வன்னியில் நேற்று உணர்வு பூர்வ அஞ்சலி

கிளிநொச்சி, ஏப்.11

ஒட்டுப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர், மாமனிதர் விக்னேஸ்வரனின் இறுதிக்கிரியை இன்று மாலை ஐந்து மணிக்கு திருகோணமலை அன்புவழிபுரம் இந்து மயானத்தில் நடைபெறவுள்ளது.

முன்னதாக நேற்றைய தினம் மாமனிதர் விக்னேஸ்வரனின் பூதவுடலுக்கு வன்னியில் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

அந்நிகழ்வுகளில் கலந்துகொண்ட பெண்

(14ஆம் பக்கம் பார்க்க)

# புலித் தளபதிகளின் போக்குவரத்தை தடுத்தால் யுத்த நிறுத்தம் குலையும்!



## தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

கிளிநொச்சி, ஏப். 11

கிழக்கிலிருந்து வன்னிக்கு விடுதலைப் புலிகளின் தளபதிகள், போராளிகள் மேற்கொள்ளும் பயணப்போக்குவரத்தை அரசு முடக்குவதற்கு முயன்றால், அது யுத்த நிறுத்த உடன்பாட்டைச் சீர்குலைப்பதாகவே அமையும். அடுத்தகட்டமாக மோசமான நெருக்கடி நிலைமை உருவாகும்.

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்களை நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசிய பின்னர், செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இணைத்தலைமை நாடுகளான நோர்வே, நெதர்லாந்து, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் கொழும்புக்கான தூதர்கள் ஹெலி மூலம் நேற்றுக்காலை 9 மணியளவில் கிளிநொச்சி வந்து சேர்ந்தனர்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான பேச்சுகள் நண்பகல் ஒரு மணியளவில் முடிவடைந்தன.

விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்

பேச்சு முடிவில் தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வி வருமாறு :-

(2ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நேற்று வன்னிக்கு எடுத்துவரப்பட்ட மாமனிதர் விக்னேஸ்வரனின் புகழுடலுக்கு புலிகளின் முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தியபோது....



வன்னிக்கு நேற்று விஜயம் செய்த இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகுகொடுத்து வரவேற்றபோது.

# புலித் தளபதிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ *கேள்வி:* இணைத் தலைமை நாடுகளின் தூதர்களுடன் நீங்கள் பேசியவை குறித்து ....?

● *பதில்:* தற்போது உருவாகியுள்ள நிலைமைகள் தொடர்பாக தூதர்களுடன் விரிவாகப் பேசியுள்ளோம். முக்கியமாக ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னால் உருவாகியுள்ள கள நிலைமைகள், நெருக்கடி நிலைமைகள் குறித்து விரிவாக எடுத்து விளக்கினோம்.

அடுத்தகட்டப் பேச்சுகளுக்கு போகமுடியாத ஒரு சூழலை இலங்கை அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை தூதர்களிடம் தெரிவித்தோம்.

அந்தப் பேச்சுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசு எந்தவித முயற்சியும் எடுக்காத நிலைமை குறித்தும் எடுத்துக் கூறியுள்ளோம்.

சர்வதேச சமூகத்திற்கு எமது தரப்பு நிலைப்பாடுகளை எடுத்து விளக்குவதற்கு சந்தர்ப்பமாக இன்றைய சந்திப்பு அமைந்தது.

### இணைத்தலைமை அழுத்தம் பிரயோகித்ததா?

✱ *கே:* நீங்கள் பேச்சுக்கு போக வேண்டும் என்பதற்காக அவர்கள் ஏதாவது அழுத்தங்களைப் பிரயோகித்தார்களா?

● *ப:* பொதுவாக சர்வதேச சமூகம் - இந்த இணைத்தலைமை நாடுகள் - எப்படியாவது ஜெனீவாப் பேச்சில் நாங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளன. இலங்கை அரசு இப்படியான நெருக்குவாரங்களை, தடங்கல்களை எமக்கு ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை விளக்கினோம்.

குறிப்பாக ஜெனீவா உடன்பாட்டுக்குப் பின்னர் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள், போராளிகள், பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமை, அதன் தொடர்ச்சியாக திருமலையில் தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் கொல்லப்பட்டமை போன்ற விடயங்களைச் சுட்டிக்காட்டினோம். தவிரவும் மிக முக்கியமாக பேச்சுக்குப் போவதற்கு முன்னால் எங்களின் கிழக்கு மாகாணத்தளபதிகள், பொறுப்பாளர்கள் ஆகியோர் எமது தலைமையைச் சந்திக்க வேண்டியுள்ளது.

எமது தலைமை அவர்களுடன் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. இப்படியான கலந்துரையாடல் நிகழ்வுக்குப் பின்னால்தான் உறுதியான தீர்மானத்தை எடுக்கக் கூடியதாக இருக்கும்.

இதற்குள், இலங்கை அரசு, நான்கு வருடங்களுக்கு மேலாக எமது தளபதிகள், போராளிகள் ஆகியோரின் போக்குவரத்துத் தொடர்பாக இருந்த நிலைமையை - நடைமுறையை - மாற்றி புதிய கட்டுப்பாடுகளையும், நிபந்தனைகளையும் போட்டு, எமக்குப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்த முனைகிறது.

இது நிச்சயமாக யுத்தநிறுத்த சூழலை இல்லாமல் செய்கின்ற ஒரு முயற்சியாகத்தான் பார்க்கின்றோம். இந்த நிலைமையை தூதர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம்.

✱ *கே:* பேச்சு நடக்க இன்னும் சில தினங்கள் இருக்கின்ற நிலையில் ஸ்ரீலங்கா அரசு மாற்றங்களைச் செய்து நீங்கள் பேச்சுக்குப் போகும் சூழலை உருவாக்கும் என நம்புகிறீர்களா?

● *ப:* எம்மைப் பொறுத்தவரையில் இதுவரையில் எந்தவித நம்பிக்கையும் ஏற்படுத்தப்படவில்லை. எமது தளபதிகளின் போக்குவரத்துத் தொடர்பாகவோ, நிலைமைகள் தொடர்பாகவோ எந்தவித சாதகமான வெளிப்பாடுகளும் அரசால் காட்டப்படவில்லை.

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படும் என்று ஓர் உறுதிமொழி அளித்திருக்கிறார். அனுசரணையாளர் ஊடாக இச்செய்தியை அனுப்பியுள்ளார்.

ஆனால் எவ்வளவு தூரம் இது உண்மையாக அமுல்படுமோ என்பது கேள்விக்கிடமாக இருக்கிறது.

ஏனெனில் ஜெனீவாவில் கூட சர்வதேச அரங்கில் நின்றுகொண்டு ஓர் இணக்கப்பாட்டைச் செய்துவிட்டு அதன் பின்னர் இலங்கை அரசு நடந்துகொண்ட முறைகளையும் வெளிப்பாடுகளையும் எல்லோரும் அறிந்ததே.

இந்த முறையும் ஜனாதிபதி இப்படி ஓர் அறிவிப்பை செய்திருக்கும் நிலையில் அது எவ்வளவு தூரத்துக்கு நடைமுறைக்கு வரப் போகிறது என்பதில் எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது.

எமது தளபதிகள் எமது தலைமையைச் சந்திக்கின்ற போதுதான் அடுத்தகட்டத் தீர்மானத்தை நாம் எடுக்கக் கூடியதாக இருக்கும்.

இந்தப் போக்குரவரத்து நடைமுறை தொடர்பான விவகாரம்தான் முக்கிய விடயமாக இன்று உள்ளது.

### தமிழீழக் கடற்படையை பயன்படுத்துவீர்களா?

✱ *கே:* தளபதிகளின் போக்குவரத்துக்கு தமிழீழ கடற்படையைப் பாவிக்கும் யோசனை குறித்துத் தூதர்களுக்குத் தெரிவித்தீர்களா?

● *ப:* இது தொடர்பாக அவர்களுக்கு விளக்கியுள்ளோம்.

இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வருவதற்கு முன்னால், எங்கள் கடல் பிரதேசம் சகலதும் எமது கட்டுப்பாட்டில் இருந்தது. இதற்குள் எங்கள் சுதந்திர நடமாட்டம் இருந்தது.

தென் தமிழீழத்துக்குப் போக்கு வரத்து செய்கின்றபோது கூட கடற்படையால் தடுக்க முடியாத சூழல் இருந்தது. அப்படித் தடுத்தால் அந்தத் தடைகளை ஊடறுத்துக்கொண்டு சென்றுவருவது வழமை.

ஆகவே தொடர்ச்சியாக நடைபெற்று வந்த இந்தப்போக்குவரத்துக்கு தற்போது இடையூறு செய்யப்பட்டுள்ளது. அதை இப்போது முற்றாகத் தடுக்கும் நிலைக்கு இலங்கை அரசும், படைகளும் வந்துள்ளன. யுத்தநிறுத்த உடன்பாட்டுக் கா[illegible] குறி[illegible]தற்காகத்தான் ஓர் ஒழுங்கு ந [illegible] றை கண்காணிப்புக்குழுவால் கொண்டு[illegible]ரப்பட்டது.

அதாவது -

கடந்த காலங்களில் எமது தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் பயணம் செய்வது என்பதும், எமது போராளிகளின் தரைவழிப் போக்குவரத்து, அவசர தேவைகளுக்கு வான்வழிப் போக்குவரத்து என்பனவும் ஏற்கனவே நடைமுறையில் இருந்தன.

இவை எல்லாவற்றையும் நிராகரித்து எம்மைத் தள்ளுகின்ற சூழலுக்கு இப்போது இலங்கைப் படைகளும் அரசும் வந்திருக்கின்றன.

இதனை, அமைதிச் சூழலை முற்றுமுழுதாகவே சீர்குலைத்து, பழைய நிலைக்கு - யுத்தநிறுத்த சூழலை இல்லாதொழித்து - எங்களை பழைய நிலைக்குத் தள்ளுகின்ற ஒரு நகர்வாகத்தான் பார்க்கவேண்டியுள்ளது.

### ஜெனீவாப் பேச்சை சாத்தியமற்றதாக்கும் போக்கு

சாதாரணமாக போராளிகளின் நடமாட்டங்கள், பயணங்கள் கூட - தளபதிகளின் பயண நடைமுறைகள் கூட - முடக்கப்பட்ட, தடுக்கப்பட்ட நிலையில் நாங்கள் ஜெனீவாப் பேச்சுக்கு வருவது என்பது எந்தவிதத்திலும் சாத்தியம் அற்றது. எங்கள் தலைமைப் பீடம் தளபதிகளுடன் கூடி ஆராயாமல் அடுத்த கட்ட நகர்வு எதையும் எடுக்க முடியாத நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே, ஸ்ரீலங்கா அரசு, யுத்த நிறுத்த நடைமுறையைப்பேண விரும்புகிறார்களா? இல்லையா? என்பது குறித்து தீர்க்கமான ஒரு பதிலைத் தரவேண்டும். அதை தெளிவாக ஸ்ரீலங்கா அரசு முன்வைக்க வேண்டும்.

இப்படியான நெருக்குவாரங்களை - மறைமுகமான நெருக்கடிகளை - ஏற்படுத்தி எங்களைப் பழைய நிலைக்குத் தள்ளுகின்ற போக்கை சர்வதேச சமூகத்தவருக்கும் அனுசரணையாளர்களுக்கும் இன்று விளக்கியுள்ளோம்.

நிச்சயமாக ஸ்ரீலங்கா அரசுக்கு இவர்கள் (தூதர்கள்) தங்கள் அழுத்தங்களைப் பிரயோகிப்பார்கள் என நம்புகிறோம்.

✱ *கே:* ஸ்ரீலங்கா கடற்கலங்களில் தளபதிகள் செல்வதற்கு அரசு முன்வைத்துள்ள யோசனையை ஏற்பீர்களா?

● *ப:* அது ஒருபோதும் நடக்கக்கூடிய விடயம் அல்ல. ஏனெனில் ஸ்ரீலங்கா கடற்படையை விட வலிமையான கடற்படை எங்களிடம் இருக்கின்றது. எங்களிடம் பெரிய கட்டுப்பாட்டுப் பகுதி இருக்கின்றது. இவை உலகம் அறிந்த உண்மை.

ஆகவே, எம்மைக் கொச்சைப்படுத்தும் வகையில் - பலவீனர்களாகக் காட்டும் வகையில் - இப்படியான அறிவிப்பை ஸ்ரீலங்கா அரசு விடுப்பது, எங்களை ஆத்திரமூட்டுகின்ற ஒரு செயலாகவே பார்க்கின்றோம். எப்போதும் அதை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

சுயமான எங்கள் கடற்படை கலங்களில்தான் நாம் பயணிப்போம். ஸ்ரீலங்காவின் இந்தப் பரிந்துரைகள், எங்களைச் சீண்டி ஆத்திரமூட்ட முன்னெடுக்கப்படும் முயற்சியாகவே பார்க்கின்றோம்.

### அரச கடற்கலங்களில் பயணிக்க ஏன் பின்னடிப்பு?

● *ப:* ஸ்ரீலங்கா கடற்படையின் கலங்களில் உங்கள் தளபதிகள் ஏன் பயணிக்க மறுக்கிறார்கள்?

● *ப:* ஸ்ரீலங்காவின் கடற்கலங்களில் ஒருபோதும் பயணிக்க நாங்கள் தயாரில்லை. கடந்த 4 வருடங்களாக இரு தரப்பாலும் ஏற்கப்பட்ட பொதுவான நடைமுறை ஒன்று இருந்தது. அதாவது எமது கடற்படைக்கலங்களில்தான் எமது தளபதிகள், போராளிகள் போக்குவரத்துச் செய்தார்கள். அந்தக் காலங்களில் கண்காணிப்புக் குழுவினரும் பிரசன்னமாக இருந்தார்கள்.

இந்த நடைமுறைகளை தற்போது தூக்கியெறிந்து, உதாசீனப்படுத்தி, தமது கடற்படைக் கலங்களில் எமது தளபதிகள் போக்குவரத்துச் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் தங்களால் ஏற்பாடு செய்யப்படுகின்ற படகுகளில் தா[illegible] பயணிக்கவேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கின்றார்கள். இது எங்களின் போராட்ட பலத்தை - எங்களின் செயற்பாடுகளை - கொச்சைப்படுத்துகின்ற, பலவீனப்படுத்துகின்ற முயற்சியாகத்தான் அமைகின்றது.

இதை ஒருபோதும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஸ்ரீலங்காவின் கடற்படையின் பாதுகாப்பை நாம் நம்பப்போவதும் இல்லை.

✱ *கே:* உங்கள் தளபதிகள் உங்கள் கடற்படைக் கலங்களில் சுயாதீனமாகப் பயணிக்கத் திட்டமிட்டு, அப்படி வரும்போது, ஸ்ரீலங்கா கடற்படை தாக்கினால், யுத்தநிறுத்தம் முடிவுக்குவருமா?

● *ப:* நிச்சயமாக, அந்த ஆபத்தை அரசுக்கும், கண்காணிப்புக் குழுவுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

எங்கள் கடற்படைப் படகுகள் எங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து, அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைக் கடக்கும்போது நிச்சயமாக கடற்படையினர் அதைத் தடுப்பதற்கோ அல்லது தாக்குவதற்கோ முயலலாம். அப்படியான நேரத்தில் நாங்கள் தற்காப்பு நடவடிக்கையை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம். இது நிச்சயமாக யுத்த நிறுத்த மீறலாகவே அமையும்.

இப்படியான நெருக்கடிய நிலை ஏற்படாமல், எங்கள் படகுகள் பாதுகாப்பாகப் பயணம் செய்வதற்கான உத்தரவாதத்தை கண்காணிப்புக்குழு தருவதன் ஊடாகவே இந்த நிலையைத் தவிர்க்கலாம் என்பதை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

✱ *கே:* தளபதிகளின் போக்குவரத்துக்கு அரசு அனுமதி வழங்காவிட்டால் என்ன நடவடிக்கையை நீங்கள் எடுக்கப்போகிறீர்கள்?

● *ப:* அதாவது போக்குவரத்து எல்லாவற்றையும் முடக்குகின்றபோது, யுத்த நிறுத்த உடன்பாட்டைச் சீர்குலைப்பதாகவே அது அமையும். ஏனெனில், அந்த உடன்பாட்டுக்கு அமைய போராளிகளின் நடமாட்டங்கள், போக்குவரத்து நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இதை அவர்கள் தடுப்பார்களேயானால் நிச்சயமாக யுத்த நிறுத்த உடன்படிக்கை கேள்விக் குறியாகி அடுத்த கட்ட[illegible] நெருக்கடி நிலை உருவாகும் சாத்தியம் ஏற்படும்.

✱ *கே:* ஜெனீவா பேச்சுக்குப் போவதற்கு உங்கள் விமானத்தளத்தைப் பயன்படுத்தப் போகிறீர்கள் என செய்தி ஒன்று வெளியானது. அது குறித்து .......?

● *ப:* நாங்கள் பேச்சுக்காகப் பயணிக்கும் சமயங்களில் இலங்கை அரசின் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்தும் அவர்களின் செயற்பாடுகள் பற்றியும் எங்களுக்கு நம்பிக்கை யீனம் ஏற்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக நம்பகமான தகவல் ஒன்று எமக்குக் கிடைத்துள்ளது. எங்களின் பேச்சுக்குழு பயணம் செய்கின்றபோது அக்குழுவுக்கு எதிராக ஒட்டுப்படைகள் இலங்கைப் படைகளுடன் சேர்ந்து சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. இதன் காரணமாகவே பாதுகாப்பு உத்தரவாதம் தொடர்பாகத் தலைமைப்பீடம் இந்த நிலைப்பாட்டை முன்வைத்தது.

எங்கள் தூதுக்குழு அப்படிப் பயணிப்பதாக இருந்தால் அது சர்வதேச சமூகத்தின் அல்லது அனுசரணையாளர்களின் முழுமையான பாதுகாப்பு உத்தரவாதத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்படியான நடைமுறைகள் இல்லாத பட்சத்தில் எமது பயணங்களுக்கு எமது தலைமைப்பீடம் அனுமதி வழங்காது என நான் நினைக்கிறேன்.

✱ *கே:* உங்கள் விமானத்தில் நீங்கள் போக மாட்டீர்கள் என்று கருதமுடியுமா?

✱ *கே:* எந்தவிதமான வழிமுறைகளை நாங்கள் கையாளவேண்டும் என்பதை, பேச்சுக்கு போகின்ற ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் போதுதான் தெரிவிக்கலாம்.

### ஸ்ரீலங்கா அரசுக்கு இறுதிச் சந்தர்ப்பம்

✱ *கே:* யுத்தத்தை ஆரம்பிக்கும்படி பொது அமைப்புகள் உங்களுக்கு விடுக்கும் கோரிக்கைகள் குறித்து ....?

● *ப:* அதாவது எங்கள் மக்கள் பொறுமை இழந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நிச்சயமாக மக்களின் உணர்வுகள், எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப எமது தலைமைபீடம் தீர்க்கமான முடிவை எடுக்கும்.

ஆனால் நாங்கள் இறுதிக் கட்டமாக ஸ்ரீலங்கா அரசுக்கு கால அவகாசத்தையும் சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளோம். அதை அரசு எவ்வளவு தூரம் மதித்து நடக்கின்றது என்பது கேள்விக்குரிய விடயமாக இருக்கின்றது.

இலங்கைப் படைகளும் அரசும் நடந்துகொள்கின்ற விதங்கள், செயற்பாடுகள் நாங்கள் வழங்கியுள்ள அரிய சந்தர்ப்பத்தை சீர்குலைக்கும் வகையில்தான் அமைந்துள்ளன.

ஒன்றுபட்ட மக்களின் அபிலாஷைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவகையில் தீர்மானங்களை தலைமைப்பீடம் எடுக்கும்.

✱ *கே:* அடுத்த கட்டப் பேச்சு இறுதிப்பேச்சாக அமையுமா?

● *ப:* 2ஆம் கட்டப் பேச்சுதான் இறுதிச் சந்தர்ப்பமோ என்று தெரியவில்லை. 2ஆம் கட்ட பேச்சுகள் நடைபெறுமோ என்பதே இன்று கேள்விக்கிடமாக்கப்பட்டுள்ளது. ஆகவே 2ஆம் கட்டப்பேச்சு நடைபெற்றால்தான் இதுபற்றிக் கருத்துக்கூறலாம்.

✱ *கே:* பேச்சுக்கு போக வேண்டும் என விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் சர்வதேச சமூகம், ஜெனீவா இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தும்படி அரசுக்கும் அழுத்தம் கொடுக்கின்றது என நம்புகிறீர்களா?

● *ப:* இந்தச் சந்தேகத்தை இன்று இணைத்தலைமை நாடுகளின் தூதர்களிடம் கிளப்பினோம்.

விடுதலைப் புலிகளிடம் மட்டும்தான் அழுத்தத்தை பிரயோகிக்கிறீர்களா என்ற கேள்வியை அவர்களிடம் எழுப்பினோம்.

இருதரப்புகளிடமும்தான் கோரிக்கை விடுக்கிறோம் என்று அவர்கள் பதில் அளித்தனர். உங்களுக்கு மட்டும் அழுத்தம் தருவதாக நினைக்காதீர்கள், இரு தரப்புக்கும்தான் விடுக்கிறோம் என்று தெரிவித்தனர். (உ-3)

**(பேட்டியின் மிகுதிப்பகுதி பின்னர் வெளியாகும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஒட்டுப்படை அரசியலால் அமைதி முயற்சிகளுக்கு வேட்டு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'ஒட்டுக்குழு அரசியல்' இலங்கைத் தீவை போரை நோக்கிய திசையில் தடம்பதிக்கச் செய்கின்றது என்று விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ சஞ்சிகையான 'விடுதலைப் புலிகள்' இதழ் தனது பத்தியில் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஒட்டுக்குழுவை வைத்துக்கொண்டு மஹிந்த அரசால் புலிகளுடன் போரும் செய்யமுடியாது, சமாதானமும் செய்ய முடியாது என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் புலிகள் கோரியிருக்கின்றார்கள்.

போரைநிறுத்தி, பேச்சு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உலக நாடுகள் முற்படும் இந்த வேளையில், ஒட்டுக்குழு அரசியல் மூலம் இலங்கைத் தீவில் இரத்த ஆறு ஓட மஹிந்த அரசு வழிவகைகளைச் செய்கின்றது என்பதைப் புலிகளின் இச்சஞ்சிகை தெளிவாக எடுத்துரைக்கின்றது.

*"ஒட்டுக்குழுவை வைத்துக்கொண்டு மஹிந்த அரசால் புலிகளுடன் போரும் செய்யமுடியாது; சமாதானமும் செய்யமுடியாது.*

*"இந்த ஒட்டுக்குழுக்களை ஏவிவிட்டு தமிழர் தாயகத்தில் கொலைகளையும், வன்முறைகளையுமே மஹிந்த அரசால் செய்யமுடியும்.*

*"அரச படைகளால் அல்லது அரச படைகளின் ஆதரவுடன் இயங்கும் ஒட்டுக்குழுக்களால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படும்போது அதை வெறுமனே பார்த்துக் கொண்டு புலிகள் இயக்கம் இருக்க மாட்டாது.*

*"மொத்தத்தில் மஹிந்த்வின் ஒட்டுக்குழு அரசியல் பெரும் இரத்தக்களரி மிக்க போரை நோக்கியே நாட்டை இட்டுச் செல்கிறது"* - என்று விடுதலைப் புலிகள் கூறியிருக்கின்றமை இந்தக் கட்டத்தில் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளின் தளபதிகளும் போராளிகளும் வன்னி வந்து செல்வதற்கான பயண ஏற்பாட்டு ஒழுங்கு இழுபறிக்கு உள்ளாகியிருக்கும் இந்தச் சூழ்நிலையில் -

அதனால் அடுத்த சுற்று அமைதிப்பேச்சு நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அருகிவரும் ஏது நிலையில் -

ஒட்டுப்படைகளை அரவணைத்துக் கட்டி வளர்க்கும் ஜனாதிபதி மஹிந்தரின் அரசியல் திட்டம் பெரும் இரத்தக்களரிமிக்க போரைநோக்கியே நாட்டை நகர்த்துப்போகின்றது என்ற எச்சரிக்கை சம்பந்தப்பட்ட எதிர்த்தரப்பான புலிகளிடமிருந்து வருவது கவனிக்கத்தக்க மிகமுக்கியமான அம்சமாகும்.

புலிகளின் கிழக்குத் தளபதிகளின் வன்னிப் பயணத்துக்கான ஏற்பாடுகளை கெடுபிடி, தடைகளைப்போட்டு, காலத்தை இழுத்தடித்து, இலங்கை அரசுத் தரப்புக் குழப்புமானால் முன்னரைப் போன்று தமது சொந்தப் பயணத்தைப் புலிகளே ஏற்பாடு செய்வார்கள் என்று அறிவித்திருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அந்தப் பயணத்தை வழி மறித்து இடையூறு செய்ய இலங்கை அரச கடற்படை எத்தனிக்குமாக இருந்தால், அது பாரிய யுத்தநிறுத்த மீறலாகவே அமையும் என்றும் எச்சரித்திருக்கின்றார்.

அத்துடன் அவ்வாறான நிலைமை ஏற்படுமாக இருந்தால் அது எதிர்காலத்தில் ஸ்ரீலங்காக் கடற்படைக்கும் அதே நிலைமையைத்தான் ஏற்படுத்தும் என்பதோடு, அந்நிலைமை யுத்த நிறுத்த முறிவுக்கே இட்டுச் செல்லும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றமை மிக சிக்கலான எதிர்காலத்தை நோக்கி நாடு நகருகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

புலிகளின் கிழக்குத் தளபதிகளின் வன்னிப் பயணத்துக்கு கெடுபிடி - குழப்பம் - அற்ற ஒழுங்குகளை இலங்கை அரசுத் தரப்புச் செய்யத் தவறி, அதன் காரணமாக தங்களின் சொந்தக் கடல் வழிப் பயணத்தைப் புலிகள் ஏற்பாடு செய்வார்களாயின் -

அதை இலங்கைக் கடற்படை வழிமறிக்க - அல்லது தடுத்து இடைஞ்சல் பண்ண - முயற்சிக்குமானால் -

அது பெரும் போர் வெடிக்கக் காரணமாகி விடும் என்பது உறுதி.

அத்தகைய நிலைமை ஏற்பட்டால் -

யுத்த நிறுத்தத்திலிருந்து அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளில் எந்தத் தரப்பு விலகுவதானாலும் அது குறித்து 14 நாள்கள்முன்னறிவித்தல் கொடுக்கவேண்டும் என்ற யுத்தநிறுத்த ஒழுங்கு விதி கடைப்பிடிக்கப்படாமலேயே யுத்தம் வெடித்துவிடும்.

முன்னறிவித்தல் கொடுக்காமல் திடீர் யுத்தம் ஒன்று வெடிப்பதற்கான வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - இலங்கை அரசுத் தரப்பு தற்போதைய தனது கெடுபிடி நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்திக் கொடுப்பதாகவே படுகின்றது.

இது தனது தலையில்தானே மண் அள்ளிப் போடுவதற்கு ஒப்பானது என்பதை இலங்கை அரசுத் தரப்பு உணர்ந்துகொள்வது நல்லது.

## அஞ்சலகத்தில் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பப் படிவம்

கடவுச்சீட்டு பெறுவதற்கான விண்ணப்பத்தை தற்சமயம் நாடெங்கிலும் உள்ள அஞ்சலகங்களிலும் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை குடிவரவு - குடியல்வு கட்டுப்பாட்டாளர் அஞ்சல் மா அதிபருக்கு வழங்கியுள்ளார். அதே வேளை அடையாள அட்டையை சமர்பித்து கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்களை கட்டணமின்றி அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறப்பட்டுள்ளதுடன் இவ்விண்ணப்பப்படிவங்களை அஞ்சல் அதிபர் உறுதிப்படுத்திக் கொடுக்கலாம் எனவும் அஞ்சல் மா அதிபர் சேனாதீர பொது அறிவித்தல் மூலம் தெரிவித்துள்ளார். (ஓ)(22)

## சிறுவரை பணிக்கமர்த்துவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### உதவித் தொழில் ஆணையாளர் எச்சரிக்கை

சிறுவர்களை வேலைக்கமர்த்து வோர் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழ்.உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

1956 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள், சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்தல் சட்டத்தின்படி 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களைப் பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ வேலைக்கமர்த்துவது முற்று முழுதாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தொடர்பாக ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. பண்டிகைகாலத்தில் நடைபாதை வியாபார நிலையங்களில் சிறுவர்களை வேலைக்கமர்த்தும் செயற்பாடுகள் இடம்பெறுவதாக அறியமுடிகிறது.

இதனைத் தடுக்கும் முகமாக பொலீஸாருடனும் சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்களுடனும் இணைந்து தொழில் திணைக்களத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த அறிவுறுத்தலையும் மீறி சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்தும் தொழில் தருநர்களுக்கெதிராக நீதிமன்றம் மூலம் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சட்ட ஏற்பாடுகளின்படி சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவோர் 6 மாத கால சிறைத் தண்டனைக்கு ஆளாவதுடன் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தினையும் செலுத்த நேரிடும். அத்துடன் நீதிபதி அவர்களினால் தீர்மானிக்கப்படும் நட்டஈட்டுத் தொகையினையும் செலுத்த நேரிடும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (22)

## பஸ் நேரம் மாற்றம்; பயணிகள் சிரமம்

தென்மராட்சி,ஏப்.11

வடபிராந்திய போக்குவரத்துச் சபை சங்கானை - கொடிகாமம் இடையே நடத்தும் 811 தட இலக்க பஸ் சேவை நேரங்கள் மாற்றப்பட்டதால் அரச ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தினமும் சங்கானையிலிருந்து காலை 7.05 மணிக்கு புறப்பட்ட பேருந்து சேவை நேரம் காலை 6.35 மணிக்குப் புறப்படுவதால் சாவகச்சேரி வரும் அரச ஊழியர்களும் மாணவர்களும் இந்த சேவையின் பயணிக்க முடியாத நிலை ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - பிற்பகல் 4.15 மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்பட்ட பஸ்சேவை பிற்பகல் 5.15 மணிக்குப் புறப்படுவதால் மாணவர்களும் அரச ஊழியர்களும் மணிக்கணக்கில் பஸ் நிலையத்தில் காத்திருக்க வேண்டி ஏற்படுவதாகத் தெரிவித்தனர்.

மாலை 5.30 மணிக்குப் பின்னர் சாவகச்சேரிக்கு வருவதால் இப்பேருந்தில் பயணிப்போர் இருட்டான பிறகே வீடு செல்லவேண்டியுள்ளதால் பெற்றோர்கள் வீதிகளில் காத்திருந்து தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதாகக் கூறப்படுகிறது.

இந்த மார்க்கத்தில் உள்ள மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்களின் நலன் கருதி காலை 7.15 மணிக்கு சங்கானையிலிருந்தும் பிற்பகல் 4.15 மணிக்கு கொடிகாமத்தில் இருந்தும் பேருந்து சேவையினை நடத்துமாறு போக்குவரத்துச் சபை முகாமையாளரிடம் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)(22)

## கோடிகாமம் மீன்சந்தை இடமாற்றம்

தென்மராட்சி,ஏப்.11

கொடிகாமம் மத்திய சந்தையில் இயங்கிவரும் மீன்விற்பனைப் பிரிவு இடமாற்றப்படவுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கடந்த வாரம் நடந்த கலந்துரையாடலில் ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

தென்மராட்சி கிழக்குப் பிரசேத்தில் செய்யப்படவேண்டிய வேலைத் திட்டங்களை திட்டமிடுதல் தொடர்பாக கலந்துரையாடல் கடந்த வாரம் மேற்படி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலுக்கு தென்மராட்சி கிழக்குப் பிரதேச கிராமிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். கொடிகாமம் மீன் சந்தையில் உள்ள மீன் விற்பனைப் பிரிவு தற்சமயம் இடவசதியின்றியும் அதேவேளை பிரதான வீதிக்கு அருகிலும் அமைந்திருப்பதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக இக்கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை, மீன் சந்தை அமைப்பதற்கு உரிய காணி சந்தையின் மேற்குப் பகுதியில் இனங்காணப்பட்டுள்ளதாகவும் -

அக்காணியை பிரதேச சபை கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளதாகவும் - கூறப்பட்டது. இவ்வாலோசனைக்கு கலந்துரையாடலுக்கு வருகை தந்த பிரமுகர்கள் ஒப்புதல் வழங்கினர். விரைவில் இதுசார்பில் செயற்பட்டு ஆவன செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஓ-122)(22)

## பிறப்பு, இறப்பு பதிவுக் கிளையின்றி உடுவில் பிரதேச மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பிறப்பு, இறப்புப் பதிவுக் கிளை இயங்காததால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் கருத்துத் தெரிவிக்கையில்:-

இந்தப் பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்பதற்குப் பதிவாளர் தரமுடைய ஒருவர் உள்ளார். ஆனால் அங்கு அவர் தனது கடமையைப் பொறுப்பேற்றுப் பணியாற்றுவதற்கு வேண்டிய இடவசதி இல்லை எனப் பிரதேச செயலரால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையில் சனத்தொகை உள்ளது. இங்கு இணுவில் வைத்தியசாலையும் உள்ளது. இதனால் பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்வதில் மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

எனவே, இப் பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு பதிவுக் கிளையொன்று அமைக்கப்படவேண்டிய தேவையுள்ளது என்றார்.

மாவட்ட பதிவுத் திணைக்களத்தில் நடை பெற்றுவந்த பதிவு நடவடிக்கைகள் அண்மைக் காலமாகப் பிரதேச செயலகங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


(ஓ-202-204)(26)

### உதயவாக்கு

எந்தவொரு மனிதனாலும் அடுத்த மனிதனை நீதியான முறையில் கண்டிக்கவோ, குறைகூறவோ முடியாது. ஏனென்றால் எந்தவொரு மனிதனாலும் அடுத்த மனிதனை உண்மையாக அறிந்து கொண்டிருக்கமுடியாது. - *ஜேம்ஸ் லீசர்.*

### நாளை

பங்குனி 29
புதன்கிழமை
12.04.2006
திதி : சதுர்த்தசி
முன்னிரவு 08.59
நட்சத்திரம் : உத்தரம்
காலை 7.51
சுபநேரம் : 04.36 - 06.06
ராகுகாலம் : 12.06 - 01.36
(யாவும் பழைய நேரப்படி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணிவிற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திக்கும் கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் 4 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: T.P. 0779171640

(49213)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் 12-04-2006 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு றாஜீவ் ஆனைக்கோட்டைச்சந்தி., தாரகை 1ஆம் கட்டை, பருத்தித்துறை., றஞ்சித், 517, ஸ்ரான்லி வீதி., P.ரவி,தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. T.P. 2222867,2223529

(49229)

### மணமக்கள் தேவை

றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 1976,1978, 1981 பெண்களிற்கு மணமகனும் 1973 பிரான்ஸில் குடியுரிமை பெற்ற ஆணிற்கு அழகிய பெண்ணும் 1975, 12 இல் செவ்வாயுடைய வங்கியில் பணிபுரியும் பெண்ணிற்கு அதேசமய அல்லது இந்து மணமகனும் தேவை. தொடர்பிற்கு: விதூஸ், இல.44, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை T.P. 0776146221

(49200)

# UNIT
## NEW YEAR OFFER

| | |
|---|---|
| **Mother Boards** | |
| AsusP4V8X-MX-UAYZ | 6600/- |
| AsRock P4i65-Intel-SATA | 6900/- |
| AsRock 775i65 - Intel-SATA | 8000/- |
| AsRock K8NF4G SATA2-AMD | 8000/- |
| Intel Original LGA D101 | 9400/- |
| **Hard Disk** | |
| 40 Gb | 5750/- |
| 80 Gb | 6600/- |
| **Display Cards** | |
| 64 Mb AGPVGA (NVIDIA) | 3900/- |
| 128 Mb AGPVGA (NVIDIA) | 5500/- |
| PCI Express VGA 128MB | 8750/- |
| **Optical Drives** | |
| CDROM HP | 1900/- |
| CD-RW SONY | 3300/- |
| CD-RW ASUS | 3700/- |
| DVDSONY | 3250/- |
| DVDCOMBO SAMSUNG | 4900/- |
| DVD-RW | 7400/- |
| **Monitors** | |
| View Sonic 15" | 11600/- |
| DaeWoo15" | 11200/- |
| **Woofers** | |
| Logitech 2.1 M20 | 3000/- |
| Perx 4.1Home Theatre | 6000/- |
| Perx 4.1Home Theatre | 7000/- |
| Perx 5.1 Home Theatre (5000W) | 14000/- |
| Perx 5.1 Home Theatre (8000W) | 20000/- |
| Perx 2.1 Home Theatre (7200W) | 24000/- |
| Perx 5.1 Home Theatre (8200W) | 30000/- |
| **Printers** | |
| Canon Pixma IP1000 | 5400/- |
| HP 3920 | 5500/- |
| HP 3744 | 5700/- |
| HP LaserJet 1020 | 19200/- |
| Canon Laser Shot 2900 | 18200/- |
| **TV Tuner** | |
| Internal cum Capture | 4750/- |
| External | 5000/- |
| **Scanner** | |
| Benq | 5600/- |
| Canon LIDE 25 | 7300/- |
| KeyboardsFrom | 400/- |
| MouseFrom | 200/- |
| External HDD BAY | 2500/- |
| Speaker | 550/- |
| Processor Fans (Intel Original) | |
| P4 PGA | 1000/- |
| P4 LGA | 1500/- |
| [illegible]sing From | 3000/- |
| [illegible] 650VA | 4300/- |
| [illegible]pac 650VA Auto Shutdown | 4600/- |

Canon Laserjet Original Toners & [illegible] Max toners

special prices available for Resellers, assemblers, [illegible] & NGO's

Used Monitors Available

347, K.K.S. Road
M[illegible]ohara Theatre Junction.

(சி/487[illegible])

# தொழில்நுட்பக் கல்லூரியில் இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையையொட்டி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை நடத்துவதற்குரிய அனுமதியை பரீட்சைத் திணைக்களம் வழங்கியுள்ளதாக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ்.யோகராஜன் தெரிவித்தார். இப்பரீட்சை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இக்காலப் பகுதியில் குடாநாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை கண்டித்து தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பரீட்சையை புறக்கணித்தார்கள்.

இதனால் பரீட்சை நடைபெறாமல் பிற்போடப்பட்டிருந்தது. தற்போது இப்பரீட்சை நடத்துவதற்குரிய அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதென்றும் - பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - அதிபர் மேலும் தெரிவித்தார். (ஒ-14)(32)

## புதிய பிரிவுகள்

பிரிவு I :14.04.2006
பிரிவு II :15.04.2006 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிநாள் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

(சி/48788)

## மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நோர்வே, டென்மார்க், லண்டன், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடாக்கள், கடிதங்கள் ஆகியவற்றை நாமே பொதிசெய்து அனுப்புகின்றோம். இதற்காக சிறிய கட்டணம் அறவிடப்படும். ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஒரு கிலோவுக்குரிய கட்டணம் 1400/- மட்டும்

ஐந்து நாள்களில் பொதிகள் ஒப்படைக்கப்படும்.

*விசேட விலைக் கழிவு*

5 கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு கட்டணம்
ஒரு கிலோவுக்கு லண்டன் 450/-
சுவிஸ் 600/-

**RAINBOW TRAVELS & TOURS**
32-1/ 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3237, 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்) (சி/48767)

## மரண அறிவித்தல்



### இரத்தினம் இராசையா
*(கரம்பகம், மிருசுவில்)*

கரம்பகம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் இராசையா அவர்கள் 09.04.2006 அன்று காலமானார்.

அன்னார் சாலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் பாக்கியம், நவரத்தினம் (கொடிகாமம்), அழகரத்தினம் (வர்த்தக நிலையம் கலிகைச்சந்தி), தியாகராசா (மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு), விநாயகமூர்த்தி (தேசிய இராசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன்), திருஞானமூர்த்தி (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்), சிவராசா (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), தயாநிதி (இத்தாலி), பாலேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர்), வள்ளிமுத்து, ஜெபமணி, சந்திரகாந்தி, பொன்றோஸ், சோமகலா (ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்), விஜயவனிதா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), இராசாகோபாலசிங்கம் (இத்தாலி), பிரமிளா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் மட்டுவில் தெற்கில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நேரியகுளம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (49129)(26.11.16)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
சு.துரைரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்).




## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனையும் அன்பளிப்பும்

- ★ குழந்தைகளுக்கான நற்பின் பம்பஸ் வகைகள்.
- ★ குழந்தைகளுக்கான Johnson baby தயாரிப்புகள்.
- ★ குழந்தைகளுக்கான பால்மா செறலக் வகைகள்.
- ★ குழந்தைகளுக்கான வோக்கர், கட்டில், சொகுசு மெத்தைகள்.
- ★ பிரசவத் தாய்மாருக்கான பொருள்கள்.
- ★ அனைத்து ஆங்கில மருந்து வகைகள்.
- ★ இலங்கையிலேயே முதல்தரமான வைத்தியர்களால் சிபார்சு செய்யப்படுகின்ற

யாழ். பேபி நீட்ஸ் அன் பார்மசி ஸ்தாபனத்தில் கொள்வனவு செய்யும் குழந்தைகளின் உடுபுடைவைகளுக்கு - தரமான குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்கள் இலவசம். முந்துங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

**'Walkrite'** ஸ்தாபனத்தாரின்
நடக்க முடியாதவர்கள் பாவிக்கக்கூடிய
வீல் செயர் (Wheel Chair)
Walking Sticks மற்றும் உபகரணங்கள்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்.

(49176) (24-17-14)



**யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மசி**
388, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலைய வைரவர் கோயில் முன்பாக),
யாழ்ப்பாணம்.

## மலிவு விற்பனை

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தில் புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விற்பனை**

| | | |
|---|---|---|
| ✱ கொட்டன் சாறி | ~~600/=~~ | 350/= |
| சாறி வகைகள் | ~~750/=~~ | 450/= |
| சாறி வகைகள் | ~~1000/=~~ | 500/= |
| சாறி வகைகள் | ~~1100/=~~ | 600/= |
| சாறி வகைகள் | ~~1280/=~~ | 700/= |
| சாறி வகைகள் | ~~1500/=~~ | 750/= |
| ✱ பஞ்சாபி வகைகள் 32,34,36 | ~~850/=~~ ~~900/=~~ ~~950/=~~ | 600/= |

மேலும் அனைத்து புடைவை வகைகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றது.

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,**
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2985

(49202)(26.11.16)

## இளையோர் செயற்பாட்டு நிறுவனம்

**சர்வதேச சதுரங்க ஆட்டக்காரர்களால் நடத்தப்படவுள்ள சதுரங்க அறிவூட்டல் செயற்திட்டம்**

17.04.2006 - காலை - கிளிநொச்சியில் சதுரங்க அறிவூட்டல் வகுப்புகள் நடைபெறவுள்ளன. இது தொடர்பான விவரங்களுக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆசிரியர் சிவரூபனுடன் அல்லது இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் தொடர்புகொள்ளவும்.

மாலை - யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை ஆட்டக்காரர்கள் மற்றும் வெளி சதுரங்க ஆட்டக்காரர்களுக்கான வகுப்புகள் கிளிநொச்சியில் நடைபெறும்.

18.04.2006 - முல்லைத்தீவில் பாடசாலை ஆட்டக்காரர்களுக்கான வகுப்புகள் நடைபெறும். விவரங்களுக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவன முல்லை மாவட்ட இணைப்பாளர் கமலுடன் அல்லது விளையாட்டு உத்தியோகஸ்தர் முகுந்தனுடன் தொடர்புகொள்ளவும்.

19.04.2006 - வடமராட்சி கிழக்கு பாடசாலை மாணவர்களுக்கான சதுரங்க அறிவூட்டல் வகுப்புக்கள் நடைபெறும். இளையோர் செயற்பாட்டு நிறுவன வடமராட்சி கிழக்கு இணைப்பாளர் ரங்கனுடன் தொடர்புகொள்ளவும்.

20.04.2006 - திருகோணமலை சதுரங்க சங்கத்துடன் கூட்டம்.

23.04.2006 - வவுனியாவில் மன்னார்- வவுனியா சதுரங்க சங்கத்துடன் சந்திப்பு. தெய்வேந்திரனுடன் தொடர்புகொள்ளவும்.

24.04.2006 - வடக்கு- கிழக்கு சதுரங்க சம்மேளனம் அங்குரார்ப்பணம்.

25.04.2006 - வடக்கு - கிழக்கு முதலாவது சதுரங்கச் சுற்றுப்போட்டி.

தொடர்பு:
தொ.பே:- 021 2285974.

இளையோர் செயற்பாட்டு நிறுவனம்,
தலைமைப்பணிமனை,
கிளிநொச்சி.

(சி/48784)(27.26.11.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாள எதிர்க்கட்சிகளின் போராட்டத்தில் மாவோ தீவிரவாதிகளும் பங்கேற்கின்றனர்

## வீதிகளைக் கைப்பற்றி ஆட்சியைக் கவிழ்க்க திட்டம்

காத்மண்டு,ஏப்.11

நேபாள மன்னர் ஜியானேந்திராவின் நேரடி ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆரம்பித்துள்ள ஒத்துழையாமைப் போராட்டத்தை ஆதரிக்கப்போவதாக நேபாள மாவோ தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

நாட்டின் வீதிகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்போவதாகவும் அரசசின்னங்கள் (சிலைகள்) அனைத்தையும் அடித்து நொறுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர். கடந்த இரு தினங்களில் இடம்பெற்ற வன்முறைகளில் குறைந்தது மூன்று பேராவது மரணமாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசருக்கெதிராக காலவரையறையற்ற பொது வேலைநிறுத்தப் போராட்டங்களைத் தொடரப்போவதாக எதிர்க்கட்சியினர் அறிவித்துள்ளனர். பகல் நேர ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக மூன்றாவது நாளாகவும் அமுலில் உள்ளது.

மாவோ தீவிரவாதிகளின் முக்கிய தலைவர்களான பிரசாந்தா மற்றும் பாபுராம் பட்டாராயும் வெளியிட்டுள்ள மின் அஞ்சல் அறிக்கையில் நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தாங்கள் ஆதரிப்பதாக அறிவித்துள்ளனர். வேலைநிறுத்தத்தில் தாங்கள் கலந்துகொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

''மன்னர் ஆட்சி கவிழ்க்கப்படும். மன்னர் அரசுக்கு வரி வழங்குவோர் தண்டிக்கப்படுவார்கள்'' என்று தெரிவித்துள்ளனர் மாவோ தீவிரவாதம் தொடங்கியதிலிருந்து நேபாளத்தில் 13 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். வேலைநிறுத்தத்தின்போது காத்மண்டு மற்றும் அதன் அயல் நகரங்களில் போர்நிறுத்தத்தை மாவோக்கள் ஏற்கனவே அறிவித்துள்ளனர். (ப)(22)

உலக அரங்கில்

# 3.5 லட்சம் வாகனங்களை மீளப்பெறுகிறது 'சுசுகி' நிறுவனம்

டோக்கியோ,ஏப்.11

வாகன தயாரிப்பு நிறுவனமான 'சுசுகி' மோட்டார் கூட்டுத்தாபனம் லொறிகள், வான்கள் மற்றும் கார்கள் உள்ளிட்ட 3 லட்சத்து 58 ஆயிரம் வாகனங்களை தயாரிப்பு தவறைப் பழுதுபார்ப்பதற்காக ஜப்பானில் திரும்பப் பெற்றுள்ளது.

1998 மற்றும் 2000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தயாரிக்கப்பட்ட 3 ரகங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 13 ஆயிரம் வான்கள், லொறிகளில் இயக்கும் ஆழிகளை பழுதுபார்ப்பதற்காக திரும்பப் பெற்றுள்ளது 'சுசுகி' நிறுவனம். பழுது பார்க்க 45 ஆயிரம் கார்களையும் திருப்பப் பெறுகிறது இந்த நிறுவனம். இச்சேவையை 'சுசுகி' இலவசமாகவே செய்துதரவுள்ளது. (ஒ)(22)

# வைகோவின் தாயாரிடம் ஆசிபெற்றார் ஜெயலலிதா



திருநெல்வேலி மாவட்டம் கலிங்கப் பட்டியில் உள்ள வைகோ வீட்டில் அவரது தாய் மாரியம்மாளிடம் ஆசிபெறும் முதல்வர் ஜெயலலிதா.

திருநெல்வேலி,ஏப்.11

திருநெல்வேலி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்த முதல்வர் ஜெயலலிதா திடீரென வைகோவின் சொந்த ஊரான கலிங்கப்பட்டிக்குச் சென்றார். அங்கு வைகோவின் அம்மா மாரியம்மாளிடம் ஆசிபெற்றார்.

ராஜபாளையத்திலிருந்து சங்கரன் கோயிலுக்கு வரும் வழியில் வைகோவின் வீட்டுக்கு மாலை ஜெயலலிதா வந்தார். அங்கு ஜெயலலிதாவை வரவேற்கும் வகையில் திருவேங்கடம் கோவில்பட்டி வீதியில் வரவேற்புப் பாதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

வைகோ வீட்டின் முன் திருமண விழாப்பந்தல் போன்ற பிரமாண்டமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அவருடைய வீட்டினுள் பூ அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. வீட்டின் முன் போடப்பட்டிருந்த பந்தலில் ஊர் மக்கள் திரண்டிருந்தனர்.

வீட்டு வாசல்வரை காரில் வந்திறங்கிய ஜெயலலிதாவை வைகோ, அவரது மனைவி ரோணுகாதேவி, மகன் வையாபுரி ஆகியோர் பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர். அங்கிருந்த பெண்கள் குலவையிட்டு வரவேற்றனர்.

ஜெயலலிதாவுடன் அவரது தோழி சசிகலாவும் வந்திருந்தார். அனைவரும் வீட்டுக்குள் செல்லும் வழியில் வைகோவின் மனைவி ரேணுகாதேவி, மகன் வையாபுரி ஆகியோரது கையைப் பிடித்து சசிகலா நலம் விசாரித்தார்.

வைகோவின் தாய் எனது அம்மா போன்று அன்பாகப் பேசினார். ஆசி வழங்கினார். இந்தச் சந்திப்பு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்று ஜெயலலிதா பின்னர் தெரிவித்தார். (ஐ)(22)

# சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து மூன்று வீரர்களும் பூமிக்குத் திரும்பினர்

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து 3 விண்வெளி வீரர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூமியை வந்தடைந்தனர்.

ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் இவர்களை ஏற்றிவந்தது. அமெரிக்காவின் பில்மேன் ஆர்தர், ரஷ்யாவின் வேலரி தொகாரேவ், பிரேஸில் நாட்டின் மார்க்கஸ் பாண்டஸ் ஆகியோரே பூமி திரும்பிய 3 விண்வெளி வீரர்கள். இந்த மூவரும் உடல் நலத்துடன் உள்ளனர்.

அர்காலிக் பகுதியின் வட கிழக்கே 50 கி.மீ. தொலைவில் உள்ள சமவெளியில் இந்த விண்கலம் 400 கி.மீ. தொலைவு பயணம் செய்து தரையிறங்கியது. எவ்வித பிசகும் இன்றி இதன் பயணம் அமைந்ததாக ரஷ்ய தலைநகர் மொஸ்கோ அருகில் உள்ள கராலியோவ் விண்வெளி ஆய்வுக் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்தது.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து விண்கலம் தரையை வந்தடைய மூன்றரை மணி நேரம் ஆனது.

தற்போது பூமி திரும்பிய அமெரிக்க விண்வெளி வீரர் மெக் ஆர்தரும் ரஷ்ய விண்வெளி வீரர் தொகாரேவும் 6 மாத காலம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டனர்.

இவ்விருவருக்கும் பதிலாக விண்வெளி நிலையத்தில் ஆய்வுமேற்கொள்ள கடந்த முதலாம் திகதி ரஷ்ய விண்வெளி வீரர் பாவேல் வினோகிரதாவ், அமெரிக்க விண்வெளி வீரர் ஜெப் வில்லியம்ஸ் ஆகியோர் அனுப்பப்பட்டனர்.

அவர்களுடன் பிரேஸில் நாட்டின் முதல் விண்வெளி வீரர் மார்க்ஸ்ஸும் சென்றார். இது தொடர்பாக ரஷ்யாவும் பிரேஸிலும் பேச்சுக்கள் நடத்தின. அவர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒரு வாரம் இருந்தார். இவரது பயணத்துக்கான செலவு 390 கோடி இலங்கை ரூபாவாகும். (ஒ)(22)

# தொழுகையின்போது நெரிசல் 25 பெண்களும் சிறுமிகளும் பலி!

இஸ்லாமாபாத்,ஏப்.11

பாகிஸ்தானின் தென்பகுதி நகரமான கராச்சியில் சமய நிகழ்வொன்றை அடுத்து ஏற்பட்ட சன நெரிசலில் குறைந்தது 25 பெண்களும் சிறுமிகளும் மரணமாகியுள்ளனர். 70 பேருக்குமேல் காயமடைந்து - சிலர் மோசமான நிலையில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். கராச்சி பிரதான மருத்துவமனைப் பகுதியில் அவசரகாலம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இஸ்லாமிய நிலையமொன்றின் பெண்களுக்கு மட்டுமான தொழுகையொன்றின் போது சிறுமி ஒருவர் கீழே விழுந்ததையடுத்து சனநெரிசல் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாள் தொழுகையில் 10 ஆயிரம் பெண்கள் கலந்துகொண்டனர் என்றும் அதில் ஏற்பட்ட நெரிசலினாலேயே இந்த மரணங்கள் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ப)(22)

# ஞாபகம் வருதே! வைகோ ஞாபகம் வருதே!





"இந்தத் தேர்தலில் வைகோவை கேடயமாக ஜெயலலிதா பயன்படுத்துகிறார். நமது கவனத்தை எல்லாம் வைகோ மீது திருப்ப வேண்டும் என்பதுதான் ஜெயலலிதாவின் திட்டம் ஆனால் நமது இலக்கு வைகோ அல்ல. ஜெயலலிதாதான். ஜெயலலிதா தலைமையிலான அராஜக ஆட்சியை அகற்றுவது தான்.

''எனவே வைகோவை குற்றஞ்சாட்டி பேசி உங்கள் நேரத்தை வீணடிக்காதீர்கள்'' இது தி.மு.க. பேச்சாளர்களுக்கு கட்சித் தலைவர் கருணாநிதி கொடுத்த அறிவுரை.

ஆனால் நடைமுறையில் தி.மு.க. தலைவர்கள் வைகோவை மறக்க நினைத்தாலும் அவர் விடுவதாக இல்லை.

தனது பிரசாரக் கூட்டங்களில் தி.மு.கவுக்கு எதிராக நாள்தோறும் பரபரப்பாக ஏதாவது ஒரு குற்றச்சாட்டை அள்ளி வீசி வருகிறார் வைகோ. இதனால் வேறு வழியில்லாமல் பதில் சொல்லவேண்டிய கட்டாயம் தி.மு.கவுக்கு ஏற்பட்டுள்ளது.

தி.மு.கவின் கட்சிப் பத்திரிகையான முரசொலியில் வைகோ பற்றி செய்தி வராத நாளே இல்லை. பக்கத்துக்கு பக்கம் வைகோவை விமர்சித்து நாள்தோறும் ஒரு செய்தியாவது இடம்பெறுகிறது. ம.தி.மு.கவின் கட்சிப் பத்திரிகையான 'சங்கொலி' யில் ஜெயலலிதாவைக் கண்டித்து வை.கோ எழுதிய கட்டுரைகளின் குறிப்பிட்ட பகுதிகள் முரசொலியில் தினமும் வெளியிடப்படுகின்றன.

'சன்' டி.வியிலும் வைகோவுக்கு எதிரான செய்திகள் அவ்வப்போது வந்துகொண்டேதான் இருக்கின்றன. அதுபோன்று சென்னை புரசைவாக்கத்தில் நடந்த தி.மு.க.வின் முதல் தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் வைகோவைத் தாக்கிப் பேசத் தவறவில்லை மத்திய அமைச்சர் தயாநிதி மாறன்.

தன்மீது வைகோ வாரி இறைத்த புகார்களுக்கு பதில் சொல்லத் தொடங்கி,வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டு இறுதியாக 'வைகோ நமது இலக்கு அல்ல - ஜெயலலிதான்" என்றார்.

என்ன செய்வது இது மனித இயல்பு. எதை நினைக்கக்கூடாது என்று விரும்புகிறோமோ அந்த நினைப்புத்தான் நம் மனதில் வரும்.

எது எப்படியோ இந்தத் தேர்தலில் அதிகம் பேசப்படும் மனிதராகிவிட்டார். வைகோ.

*(நன்றி :தினமணி)*

# பொறுப்புகளிலிருந்து சோனியா விலகல்

புதுடில்லி,ஏப்.11

அனைத்து சமூக கலாசாரப் பொறுப்புகளில் இருந்தும் இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா ராஜினாமா செய்துள்ளார். இரட்டைப்பதவி விவகாரம் தொடர்பாக சோனியா ராஜ்யசபா உறுப்பினர் மற்றும் தேசிய ஆலோசனைச் சபைத் தலைவர் பதவியில் இருந்தும் ராஜினாமா செய்தார்.

இதையடுத்து அவர் ரேபரேலி தொகுதியில் மீண்டும் போட்டியிடப்போவதாக அறிவித்திருந்தார். ரேபரேலி தொகுதிக்கு மே மாதம் 8ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் ராஜீவ் காந்தி அறக்கட்டளைத் தலைவர் பதவியில் இருந்தும் சோனியா ராஜினாமா செய்தார். இதையடுத்து அனைத்து சமூக கலாசார பொறுப்புகளில் இருந்தும் சோனியா ராஜினாமாச் செய்துள்ளதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. (ஒ)(22)






# சிகரெட் புகையை சுவாசிப்போரை நீரிழிவு நோய் தாக்கும் அபாயம்

சிகரெட் பிடிப்பவர்கள் வெளிவிடும் புகையை சுவாசிப்பவர்கள் நீரிழிவு நோய்த் தாக்குதலுக்கு ஆளாகும் அபாயம் உள்ளதாக அமெரிக்காவில் எடுக்கப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளதாக பிரிட்டிஷ் மருத்துவ சஞ்சிகை தெரிவித்துள்ளது.

பிர்மிங்ஹாம், அலபாமா, சிகாகோ, மின்னாபோலிஸ், மின்னஸோட்டா, ஒப்லாந்த், கலிபோர்னியா ஆகிய நகரங்களிலுள்ள 4 ஆயிரத்து 500 ஆடவர் மற்றும் மக்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.

1985 ஆம் ஆண்டு இவர்களில் உடல் நிலை மற்றும் புகைபிடிக்கும் பழக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் [illegible] மீண்டும் அவர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் காலத்தில் புகைப்பிடிப்பவர்களில் 22 சதவீதம் பேரிடம் குளுக்கோஸை ஆற்றலாக மாற்றும் சக்தி குறைந்து இருந்தது தெரியவந்தது. அதாவது இரத்தத்தில் சக்கரை அளவைக் கட்டுப்படுத்தத் தேவையான அளவு இன்சுலின் சுரக்க முடியாத அளவுக்கு இவர்களின் உடல் நிலை இருந்தது தெரியவந்தது. இது நீரிழிவு நோய் வருவதற்கு ஆரம்ப கட்ட அறிகுறியாகும்.

புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாத ஆனால் புகைப் பிடிப்பவர்கள் விடும் புகையை சுவாசிப்பவர்களில் 17 சதவீதம் பேர் நீரிழிவு நோய்த் தாக்கத்துக்கு ஆளாகி இருப்பதும் தெரியவந்தது. (ஒ)(22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BIT Syllabus Included**

Restricted 15 Members only in a batch

50% Concession

**Next Batch starts on 15/04/2006**

MCSE, CCNA, CCNP, CCIE மற்றும் A+ பரீட்சைகளுக்கான இலவச ஒழுங்கமைப்பு

**Hardware & Networking பயிற்சிகளுக்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட செய்முறை பயிற்சிக்கூடம்.**

100% உள்நாட்டிலோ / வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

Valuable course materiel Free

100% Practical oriented field training centre

An Indian Engineers study centre

(சி/48767)

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு
தொடர்பு
நிர்வாகம்

Near Jaffna Hindu College,
Opp Lane to PandiKottu Pillayar Kovil,
K.K.S. Road. Opp Lane to Velankanni Church,
Kasthuriyar Road,
Jaffna.

**UNIT Education**
16/1, Killnar Lane,
Jaffna.



## ஆயுள் காப்புறுதி முகவர்கள் தேவை

ISO 9001:2000 சர்வதேசத் தரச்சான்றிதழ் பெற்ற இலங்கையின் முன்னணிக் காப்புறுதி நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடிக் கிளைகளுக்கு ஆயுள் காப்புறுதி முகவர்கள் தேவை.

**தகைமைகள்:** G.C.E.(O/L) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி, மொழியினைக் கையாளும் ஆற்றல்.

**வயதெல்லை:** 18 தொடக்கம் 55 வயது வரை. 55 வயதிற்கு மேற்பட்டவர்களின் விண்ணப்பம் திறமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**கொடுப்பனவுகள்:** 1. விற்பனை வீதத்திற்கு ஏற்ப கவர்ச்சிகரமான வருமானம்.
2. விரைவான பதவியுயர்வு.
3. வெளிநாட்டுப் பயணவாய்ப்பு.

**விண்ணப்ப முடிவு திகதி: 17.04.2006**

மே/பா உதயன்,
விளம்பர இலக்கம் 2848.

(49181)(32-16-11)



**எமது தாயக மண்ணில் நூறுவீதம் செய்முறைப் பயிற்சியுடன் எமது மாணவர்களும் கணனித்துறையில் பாரிய விற்பனர்கள் ஆக வேண்டுமென்ற கனவை நினைவாக்கும் நோக்குடன் சிறந்த செய்முறைப் பயிற்சிக்கூடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.**

**நாங்கள் யார்?**

**BIT Syllabus Included**

- இந்தியாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுபவர்கள்.
- இந்திய பொறியியல் துறையில் எலக்ட்ரோனிக்ஸ் அன்ட் கொமுனிக்கேசன் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள்.
- 2 தசாப்த காலமாக இந்திய மற்றும் உலக முன்னணி நிறுவனங்களில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான IBM, Compaq, Dell, Bell Labs, Dlink, Link sys, Microtek, Cisco மற்றும் Gateway போன்ற நிறுவனங்களுடன் இணை Hardware & Network பொருட்கள் தயாரிப்பில் பாரிய பங்காற்றியவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான Microsoft, Sun microsystems, Lotus Intl, AT& T Labs, SCO, Oracle மற்றும் Infosys நிறுவனங்களுடன் மென்பொருள் இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள்.
- கடந்த ஒரு வருடகாலமாக UNIT நிறுவனமூடாக கணனி உதிரிகள், வலைப் பின்னலமைப்பிற்கான உதிரிகள் மற்றும் அதற்குரிய சேவைகளையும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள்.
- கடந்த ஆண்டில் தாயக மண்ணிலுள்ள சில கணனிக்கல்லூரிகள் மூலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கியவர்கள்.

(சி/48765)

### கணனிக் கல்வியில் எமது முதல் கல்

- ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது, செய்முறைப் பயிற்சி இல்லாமல் இன்றைய கணனிமய உலகில் எந்த ஒரு செயலாற்றலும் முடியாது என்பதை அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டு கூடுதலான செய்முறைப் பயிற்சியுடன் கூடிய ஆய்வுகள் செய்யக்கூடிய ஒரு பயிற்சிக் கூடமாக முதல் படியாக Hardware மற்றும் Network சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக எமது முதலாவது அய்வு கூடத்தை அமைத்து பிரத்தியேகமாக Hardware மற்றும் Network கணனிக் கற்கை நெறியினை ஆரம்பித்துள்ளோம்.
- உலக அளவில் எந்தவொரு பயிற்சிகளை ஆரம்பிக்கும்போது அதற்குரிய பயிற்சிகளைப் பழகுவதற்கு தொழிற்கூடம் தான் முதலில் அமைப்பார்கள். அந்த வழியில் Hardware & Network சம்பந்தமான எமது தொழிற்கூடம் கடந்த ஒரு வருடகாலமாக சிறந்த பங்காற்றியது மட்டுமல்லாமல் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.
- விரிவுரைகள் யாவும் இந்திய பொறியியல் துறையில் சிறப்புப் பட்டம் (Electronics & Communication) பெற்று இரண்டு தசாப்த காலம் இந்திய கணனித்துறையில் அனுபவம் பெற்றவரும் இன்று தாயக மண்ணில் Hardware மற்றும் Network துறையில் முன்னணி விரிவுரையாளரால் செய்முறைப் பயிற்சியுடன் நடாத்தப்படும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாக செய்முறைப் பயிற்சிகள் செய்வதற்கு தனித்தனியாக செய்முறைப் பயிற்சிகள் செய்வதற்கு தனித்தனி நேர அலகு ஒதுக்கப்படுகிறது.
- மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளிலேயே ஒவ்வொரு மாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

**Our Field Offices:** UNIT, India. Aram Menporulagam, India. Zensoft, Malaysia. Zensoft, USA. WinCisco Labs, Canada.

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு
தொடர்பு
நிர்வாகம்

UNIT Education
16/1, Killnar Lane,
Jaffna.

Free Course Material

15 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர்

**100% JOB ASSISTANCE**

Next Batch starts on 15/04
இதில் Admission எடுப்பவர்களுக்கு
**50%**
பயிற்சிக்கட்டண கழிவு வழங்கப்படும்

Near Jaffna Hindu College, Opp Lane to PandiKottu Pillayar Kovil, K.K.S. Road. Opp Lane to Velankanni Church, Kasthuriyar Road, Jaffna.


## ஓராண்டு நினைவு அழைப்பு

**ஓராண்டு நினைவு** **18ஆம் ஆண்டு நினைவு**





அமரர் மயிலன் பாலன் | திருமதி பூரணம் பாலன்

| 31-07-1938 | தோற்றம் | 19-07-1946 |
| --- | --- | --- |
| 23-03-2005 | மறைவு | 27-05-1988 |

அமரர் மயிலன் பாலன் அவர்களின் ஓராண்டு நிறைவு நிகழ்வு இன்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற வுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(49211)(32-16-11)


**யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்



**Style Park**

Perfect Collection

**ஸ்ரைல் பார்க்**



முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்களில்

அழகிய புடை... சாம்ராஜ்ஜியம்

அனைத்து வகையான கடன் அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

MasterCard

VISA

(சி/48630)

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383

இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி எல்லே போட்டியில் வளர்மதி இரு பிரிவுகளிலும் சம்பியன்

தென்மராட்சி,ஏப்.11

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் ஆண், பெண் அணிகள் முதலிடங்களைப் பெற்று சம்பியனாகின.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியினை 1:0 என்ற ரீதியிலும் -

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி சாவகச்சேரி தென்னகத்தாரகை விளையாட்டுக் கழக அணியை 2:0 என்றும் ரீதியிலும் - வெற்றிபெற்று சம்பியனாகின. (3-117)



கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப் போட்டி நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம் இது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை தொழில்நுட்ப உத்தியோகத்தர் வே.பாராளன், பாடசாலை அதிபர் சீ.சிவநேசன் உட்பட ஏனைய விருந்தினர்களையும் படத்தில் காணலாம். (203)(24)

# யாழ். பிரதேச வலைப்பந்தாட்டம் பமிலியன்ஸ் வி.க. சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ். பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பமிலியன்ஸ் வி.க. அணி வெற்றிபெற்றது.

கடந்த புதன்கிழமை பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாடுமீன் விளையாட்டுக் கழகம் மோதியது.

பமிலியன்ஸ் வி.க. 27:22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது.

இறுதியாட்டத்தில் சிறந்த வீராங்கனையாக பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இ.யசோதா தெரிவுசெய்யப்பட்டார்.

இப்போட்டிக்கு விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே. மகேஸ்வரன், யாழ். பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், என்.பாலசுப்பிரமணியம், சென். அன்ரனிஸ் வி.க. வலைப்பந்தாட்ட அணியின் முன்னாள் வீராங்கனை திருமதி அ.டேமியன் ஆகியோர் கலந்து கொண்டனர். (3-190)

# நல்லூர் பிரதேச கபடிப்போட்டி துர்க்கா வி.க. வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம்,ஏப். 11

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் துர்க்கா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ. விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் துர்க்கா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காந்தி விளையாட்டுக் கழகம் மோதியது.

துர்க்கா விளையாட்டுக் கழகம் 72:71 என்ற புள்ளி அடிப்படையில் காந்தி விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்த ஆட்டத்தில் துர்க்கா விளையாட்டுக் கழக வீரன் எஸ். திவாகரன் சிறந்த வீரனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (3-190)





## இன்றைய ஆட்டங்கள்

தென்மராட்சி, ஏப்.11

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டிகளும் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளும் இன்று நடைபெறவுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டிகளும் பிற்பகல் 4.30 மணிக்கு ஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகளும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியும் நாவற்குழி பிக்லூட் விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன. (3-117) (24)

***

யாழ்ப்பாணம்,ஏப்.11

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இளவாலை ஹென்றீஸ் வி.க. மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

- பிற்பகல் 3.30 மணி - மயிலங்காடு ஞானமுருகன் வி.க. எதிர் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க.
- பிற்பகல் 4.30 மணி - பாஷையூர் சென். அன்ரனிஸ் வி.க. எதிர் வல்வெட்டித்துறை ஆதிசக்தி வி.க. (3-190) (24)

***

யாழ்ப்பாணம்,ஏப்.11

புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகமும் கலையகம் சனசமூக நிலையமும் இணைந்து அமரர் சி.அரியகுட்டி நினைவுக்கிண்ணத்துக்காக மாவட்ட ரீதியில் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது. புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

- பிற்பகல் 4 மணி - விக்னேஸ்வரா வி.க. (ஏ) எதிர் பாரதி வி.க.
- பிற்பகல் 4.45 மணி - கலைமதி வி.க. (ஏ) எதிர் அண்ணா வி.க. (3-190)(24)

# தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டி தென்மராட்சிக்கு கூடுதல் வெற்றிகள்

2006ஆம் ஆண்டு மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் தென்மராட்சி வலயத்துக்கு 2 முதலாம் இடங்களும், 2 இரண்டாம் இடங்களும், ஒரு மூன்றாம் இடமும் கிடைத்துள்ளன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி பி. நிரோசா 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் -வரணி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி த.அனுசியா 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

- வரணி மகாவித்தியாலத்தைச் சேர்ந்த ஆர். அனுசியா தேசிய மட்டத்தில் சாதனை புரிந்துள்ளார். (3-31)

# முல்லைத்தீவு வலய மெய்வன்மைப் போட்டி: புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சம்பியன்

பரந்தன்,ஏப்.11

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 243.5 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்று வலயமட்டச் சம்பியனானது.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

- புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 243.5 புள்ளிகள் பெற்று முதலிடத்தையும் -
- முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி 220.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் -
- முல்லைத்தீவு மகாவித்தியாலயம் 175 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

கோட்டமட்டத்தில் கரைதுறைப்பற்று கோட்டம் 843.5 புள்ளிகளைப் பெற்று முதலாமிடம் பெற்றுக்கொண்டது. (3-352-203) (24)

# யாழ். கிரிக்கெட் சங்க சுற்றுப்போட்டி முதல் சுற்றில் சென்றலைட்ஸ், யங்ஸ்ரார், பற்றீஸியன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் "ரெக்கி" வெற்றிக் கிண்ணத்திற்கான - 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இடம்பெற்ற முதல்சுற்று ஆட்டங்களில் சென்றலைட்ஸ் வி.க, யங்ஸ்ரார் வி.க, பற்றீசியன்ஸ் வி.க ஆகியன வெற்றிபெற்றன.

கடந்த சனிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். சென்றல் வி.க. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் வி.க. அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் வி.க. அணி 29 ஓவர்களில் சகல விக்கெட்டுகளை இழந்து 58 ஓட்டங்களை பெற்றது. சுரேஸ்ராஜ், அஜேனி ஆகியோர் முறையே 20, 11 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

விமலகாந் இரண்டு விக்கெட்டுக்களையும், பிரகாஸ், மதுஷன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

59 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய சென்றலைட்ஸ் வி.க. அணி 10.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

பிரிந்த 15ஓட்டங்களையும், றொகன், கலிஸ்ரன் முறையே ஆட்டம் இழக்காமல் 23,9 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சென்றலைட்ஸ் வி.க. அணி 9 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் யங்ஸ்ரார் வி.க. அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பஸ் வி.க அணிமோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் வி.க. அணியினர் 26.1ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது.

துஷ்யந்தன் 41 ஓட்டங்களையும், குகதாஸ் 12ஓட்டங்களையும் சசிவர்மன் 8 ஓட்டங்களையும் தமது அணிக்காகப்பெற்றுக் கொடுத்தனர்.

புவனேசன் நான்கு விக்கெட்டுக்களையும் சிறிதரன், திலீபன் ஆகியோர் முறையே தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

98 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய கிறாஸ் கொப்பஸ் வி.க. அணி 22.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பிரகலாதன் 17 ஓட்டங்களையும், புவனேஸ்சன் 9 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

கார்த்தீபன், சுஜீவன் ஆகியோர் முறையே தலா நான்கு விக்கெட்டுக்களையும், சதீஸ் கண்ணா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

யங்ஸ்ரார் வி.க அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் வி.க. அணியை எதிர்த்து அரியாலை மத்திய வி.க அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்திய வி.க. அணியினர் 29.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றனர்.


ரமேஸ் 14 ஓட்டங்களையும், சுதர்சன் 6 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

முகுந்தன், சுஜீவன் ஆகியோர் முறையே தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

61 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய பற்றிசியன்ஸ் வி.க. அணி 30.2 ஓவர்களில் நான்கு விக்கெட்டுகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனுகரன் 20 ஓட்டங்களையும், சுதர்சன் 13 ஓட்டங்களையும் முகுந்தன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

நரேஸ், குகதாசன், பிரதீபன், சுதர்சன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். பற்றீசியன்ஸ் வி.க. அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. (த-190) (27)





கிளிநொச்சி, அக்கராயன், ஸ்கந்தபுரம், இலக்கம் - 02 பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு அயல் பாடசாலை அதிபர் திருமதி வ.விமலேஸ்வரன் சான்றிதழ் வழங்குவதையும் - இடை வேளையின்போது இசையும் அசைவும் நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அக்கராயன் செய்தியாளர்)

## முதன்மை வீரனாகத் தெரிவானார்

பரந்தன்,ஏப்.11

அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலய 11 வயது ஆண்கள் பிரிவைச் சேர்ந்த செல்வன் ரா.கஜானன் முல்லைத்தீவு மாவட்ட மட்டம், வலயமட்டம் ஆகியவற்றில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் முதன்மை வீரனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட தடகளப் போட்டிகள் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. (352-203) (24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
09-01-1980

மறைவு
16-03-2003

## செல்வன்
## பாலசுப்பிரமணியம் பிரதீபன்

திதி: திரயோதசி

காற்றோடு வந்த செய்தி கனவெனவே
போகாதோ - நாம்
காணாத தேசத்தில் காலனவன் - உனைக்
கடுகதியில் பறித்தானோ...?
பிரதீபா! உனைக் காணத் துடிக்கும் - உன்
தம்பியைப் பாராயோ....?
உன்னோடு உறவாடிய உறவுகள்
உனை எண்ணித் தவிக்கின்றன.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

பிரகாந்த் (தம்பி)

(49216) (24-11-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையைக் காப்பாற்றுவார் என்று கனவு கண்டிருந்தோம்

## ஈழவேந்தன் எம்.பி. இரங்கல் செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.11

திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் மாமனிதர் விக்னேஸ்வரனின் மறைவு பெரும் அதிர்ச்சியையும் தாங்கமுடியாத துயரையும் தந்துள்ளது.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

திருமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் வி.விக்னேஸ்வரனின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அஞ்சலிச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வி.விக்னேஸ்வரனின் மறைவு ஈடு செய்யமுடியாதது. இவரைத் தேசியப் பட்டியலில் இணைத்து அம்பாறையையும் திருகோணமலையையும் ஒருங்கே காப்பாற்றலாம் எனக் கனவு கண்டோம். நாம் கண்ட கனவை வெறிகொண்ட சிங்கள உளவுப் படை சிதறடித்துவிட்டது.



அகவை 50ஐ எட்டிப் பிடிக்கையில் அவர் உயிர் பிரிந்தமை எமது உள்ளத்தை வதைக்கிறது. திருகோணமலையைக் காப்பாற்ற அவர் பட்டபாட்டை நாடறியும் - நானிலமும் அறியும் - வாழும் போதே செத்தவர்களாகப் பலர் காட்சியளிக்கின்றனர். இவர் செத்தும் வாழும் சிலர் வரிசையில் இடம்பெற்றுள்ளார்.

உயிரனைய நண்பனை இழந்து நான் கண்ணீர் விடுகின்றேன். அனைத்து தமிழ் மக்கள் சார்பிலும் என் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறேன் - என்று அதில் உள்ளது. (எ-204)

# சிங்களப் படையினருக்கு மத்தியில் தமிழீழக் கனவோடு பணிசெய்தவர்

## யாழ். மாவட்ட எம்.பி. சிவநேசன் இரங்கல்

யாழ்ப்பாணம்,ஏப்.11

தமிழீழ லட்சியக் கனவோடு திருமலையில் குவிக்கப்பட்ட சிங்களப் படையினருக்கு மத்தியில் நின்று மக்கள் பணியாற்றியவர் விக்னேஸ்வரன்.

- இவ்வாறு தமது இரங்கல் செய்தியில் தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்.

அவர் தமது செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

திருகோணமலையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முன்னின்று தீர்வுகாணும் ஆற்றல் மிக்கவராக விளங்கியவர் விக்னேஸ்வரன். அவரது கொலை திட்டமிட்டே செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஒருதடவை அவர் தங்கியிருந்த வீட்டிற்குக் குண்டு எறிந்து கொலை அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டபோதும் தளராத துணிவோடும், தன்மான உணர்வோடும் தமிழினத்தின் பற்றோடும் தமிழீழ இலட்சியக் கனவோடு தொடர்ந்தும் மக்கள் மத்தியில் பணியாற்றிய காரணத்தால் இராணுவம் பத்தடிக்கு ஒருவராக குவிக்கப்பட்ட பிரதேசத்தில் இவர் கொல்லப்பட்டிருக்கிறார்.



எனவே, அரசு பொறுப்பற்று செயற்பட்டுள்ளமையைச் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும். இதனூடாக சர்வதேச சமூகம் இந்நிலை தொடராது இருப்பதற்கு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுத்து ஜெனீவா தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படாத நிலை ஏற்படுமானால் இவ்வாறான கொலைகள் தொடரும். இதனால் மக்கள் போராட்டத்தினூடாகவே தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

பேரவைத் தலைவர் விக்னேஸ்வரனின் இழப்பை நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இழப்பின் பின்னர் நடைபெற்ற பேரிழப்பாகவே கருதுகின்றோம். இத்தகைய தலைவர்களின் இழப்புகள் தொடருமேயானால் பேச்சுவார்த்தை குழப்பமடைந்து போர்ச்சூழல் உருவாகுவது சர்வதேச சமூகத்தாலும் தடுக்கமுடியாது ஆகிவிடும் என்பது உண்மை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ) (24)

# மக்களை அணிதிரட்டி ஜனநாயக செயற்பாடுகளில் முன் நின்றவர் விக்கி

## இரங்கல் செய்தியில் பத்மினி சிதம்பரநாதன் எம்.பி.



யாழ்ப்பாணம்,ஏப்.11

தமிழர் தலைநகரில் மக்களை அணிதிரட்டி தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தும் ஜனநாயக வழிப் போராட்டங்களில் முன்னின்றவர் மாமனிதர் விக்னேஸ்வரன்.

இவ்வாறு ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்.

எமது இலட்சியத்தை அடைவதற்கு இரு வழிகள் எம்மிடம் இருக்கின்றன. அதில் ஒன்று ஜனநாயக வழியில் எமது கோரிக்கைகளுக்காக எம் குரலை ஓங்கி ஒலிப்பது, உரிமைகளைத் தட்டிக்கேட்பது, அநீதிகளை இடித்துரைப்பது, மக்கள் பங்குபற்றலுடன் கூடிய பேரெழுச்சி நிகழ்வுகளூடாக எம் கருத்துகளை உலகுக்குத் தெரியப்படுத்துவது என்ற இன்னோரன்ன முறைகளூடாக எம் உரிமைக்குரலை வெளிப்படுத்தி நியாயம் கோரல். மற்றைய வழி ஒடுக்கப்பட்ட சமூகத்தின் ஜனநாயகக் குரலுக்கு செவிசாய்க்காமல் விடாப்பிடியாகத் தமது ஒடுக்குமுறையை ஒடுக்குமுறையாளர்கள் தொடரும் பட்சத்தில் ஒடுக்கப்பட்ட சமூகம் ஆயுதம் தாங்கி வன்முறை வழியில் ஒரு வீரம் செறிந்த போராட்டத்தை நடத்துவது. இலங்கைத் தீவைப் பொறுத்த வரையில் சுதந்திரத்தின் பின்னர் தமிழ்ச் சமூகத்தின் உரிமைகள் ஒடுக்கப்பட்ட போதும் ஜனநாயக ரீதியாக தமிழ் மக்கள் தமது குரலை முன்வைத்த போதும் சிங்கள ஆட்சியாளர்கள் அதனை மதிக்காமல் ஒடுக்குமுறையை தொடர்ந்ததன் காரணமாகத் தமிழர்கள் ஆயுதம் தாங்கவேண்டி ஏற்பட்டது.

இந்த இரண்டு வழிமுறைகளிலும் ஆயுதம் தாங்கிய வன்முறை வழியில் எமது உரிமைகளை வென்றெடுப்பதுவே அதிக பேரம் பேசல் இல்லாதது. ஆனால், அகிம்சை வழியிலான போராட்டம் கடினமானது. ஏனெனில், 50 வருடங்களுக்கு மேலாகப் படுகொலைகள், கைதுகள், பாலியல் வல்லுறவுகள், சித்திர வதைகள், இனக்கலவரங்கள், சூறையாடல்கள், சிறையடைப்புகள் போன்ற வன்செயல்களால் மிகுந்த ஆத்திரமும் வெறுப்பும் உள்ள எம்மக்களை நிதானப்படுத்தி ஒரு கட்டுக்கோப்புடன் எமது போராட்டங்களை முன்னெடுப்பதுவே மிகவும் கடினமானது. அத்தகைய ஒரு பணியையே அதாவது மக்களை அணிதிரட்டி தமிழ்த் தேசியக் குரலை வெளிக்கொணரும் ஒரு வேலையையே திரு.விக்னேஸ்வரன் செய்துவந்தார்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் முதிர்ச்சி நிலையில் இன்று இலங்கை இனப் பிரச்சினையில் சர்வதேசம் தலையிட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் நாம் மீண்டும் ஜனநாயகப் போராட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வந்தோம். விக்னேஸ்வரன் தமிழர்களின் தலைநகரமான திருகோணமலையில் இத்தகைய ஜனநாயக எழுச்சியில் முன்னணியில் நின்ற ஒருவர். அவரைக் கொலை செய்ததன் மூலம் ஜனநாயக வழிமுறை முற்றுப்புள்ளி வைக்க முயல்கின்றனர். அதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஆயுதப்போராட்டத்தை மட்டுமே ஒரு தெரிவாக நிர்ப்பந்திக்கிறார்கள் என்பதைச் சர்வதேசத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

பேரினவாதிகள் கபளீகரம் செய்யத் துடிக்கும் திருமலை நிலப்பரப்பில் நின்று தமிழர் தாயத்தின் எழுச்சிக் குரலை உலகெங்கும் அறைந்த மாமனிதர் விக்கியின் அநியாய அழிப்பினால் ஆறாத் துயரில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதோடு, எமது விடுதலை மீது பற்றுக் கொண்ட எம்மவரோடும் புலம்பெயர்ந்து வாழும் எம் உறவுகளோடும் எம் துயரை யும் இலட்சிய உறுதியையும் பகிர்ந்துகொள்வோம் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ) (24)

# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் அறுபதாவது அகவை நிறைவையொட்டி வெளியிடப்பட்ட நூலின் வெளியீட்டு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் ஆதீனமண்டபத்தில் நடைபெற்றது.

'அகவை அறுபதுக்கு ஓர் அன்புக் கையுறை' என்னும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நூல் வெளியீட்டு விழாவில் 'யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும்'' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், கலாநிதி வண நீ. மரியசேவியர் அடிகள், பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை கலாநிதி சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக்கொண்டார். (எ-14)(32)





**யாழ்.பல்கலைக்கழப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் அறுபதாவது அகவை நிறைவையொட்டி இடம் பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் விழா நாயகர் கௌரவிக்கப்படுவதையும், பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் சிறப்புப் பிரதியை வெளியிடுவதையும், நிகழ்வில் பங்கேற்றவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.**

*(படங்கள்: ஒளிஅதிரன்)*

# பல்கலை. பேரவை உறுப்பினர்கள் தொடர்பான இணையச்செய்திக்கு அரசியல்துறை கண்டனம்

கிளிநொச்சி,ஏப்.11

யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் தொடர்பாகக் கடந்த வாரம் இணையத்தளங்கள் சிலவற்றில் வெளியிடப்பட்டிருந்த செய்திகளுக்கு யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியல்துறை வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

- கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் தொடர்பாக, இணையத்தளங்கள் சில அநாகரிகமான முறையில் செய்திகளை வெளியிட்டிருந்தன. இந்தச் செயற்பாடு திட்டமிட்டு யாழ். கல்வியியலாளர்களுக்கும் எமக்கும் இடையே ஓர் இடைவெளியை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக, யாழ்.பல்கலைக்கழக சமூகம் நீண்டகாலமாக தமிழ் தேசியத்துக்காக உழைத்து வருகின்றது. இதனைப் பொறுத்துக்கொள்ளமுடியாத ஸ்ரீலங்கா அரசும் சில சக்திகளும் அண்மைக் காலமாக யாழ்.பல்கலைக்கழகத்தில் சில குழப்பங்களை ஏற்டுத்த முனைந்து வருகின்றன.

இதன் ஒரு கட்டமாகவே மண்டை ஓட்டுடன் கூடிய கல்வியியலாளர்களின் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனை ஒரு சதி நடவடிக்கையாக நாம் கருகின்றோம். இவ்வாறான சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இவை தொடர்ந்து நடைபெறுவதை எம்மால் அனுமதிக்கமுடியாது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)(32)

# தவக்காலச் சிந்தனை 42

## நடுநிலை நின்று தீர்வு கூறுவோம்

ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது அவர் என்ன குற்றம் செய்தார் என்று அறியாது தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமோ- (யோவா: 7:51)

தவறேதும் புரியாத இயேசுவுக்குக் கிடைத்த தீர்ப்பு மரணம். அநீதியின் கூக்குரலில் நீதி புதைந்துவிட அநியாயத் தீர்ப்பிட்டு இரத்தப் பழிக்குக் காரணம்மானான் பிலாத்து. நடுநிலையற்ற முடிவினால் கல்வாரி குருதி மலையானது.

ஆள்பார்த்து முகம்பார்த்து நாம்எடுக்கும் பக்கச்சார்பான முடிவுகளால் எத்தனை பாதிப்புகளைப் பிறர் எதிர்கொள்கின்றனர். குற்றஞ்சாட்டுவதும் எழுந்தமானத் தீர்ப்பளிப்பதும் சுலபம். ஆனால், தீர்ப்புக்குப் பதிலாகத் தீர்வுகளை முன்வைப்பதே சிறந்தது.

உலகில் குற்றமற்றவர் எவருமில்லை. பிறரைச் சுட்டும்போது ஏனைய விரல்கள் எமது நெஞ்சை நோக்கி நிற்பதை மறக்கக்கூடாது. எமக்கு நாமே தீர்ப்பிட்டுத் திருத்த முயல்வோம். எமது சகோதரர் தண்டனை பெறக் காரணியாக இருந்த நிலைகளுக்காக மன்னிப்பு வேண்டுவோம். எமது குற்றத்திற்கு நாமே பொறுப்பேற்கக் கற்றுக்கொள்வோம். எம்மை மட்டும் நியாயப்படுத்துவதை விடுத்து அடுத்தவரின் கூற்றையும் செவிமடுத்து உண்மைக்கு உயிர்கொடுப்போம்.

இறை சமாதானத்துடன் கூடிய மனச்சாட்சி தீர்ப்புக் கூறட்டும். நிரபராதிகளையும் சிறையில் [illegible] விடுவிக்கக் குரல்கொடுப்போம். மன்னித்து மன்னிப்புப் பெறும் மக்களாக மாறி [illegible] வாழ்வோம்.

*எஸ்.பேசுதாஸ், கொழும்புத்துறை.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பண்டிகைக்கால சிறப்புத் தள்ளுபடி

**சித்திரைப் புத்தாண்டு மற்றும் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை**

- புத்தம் புதிய கண்கவர் டிசைன்களில் சாறிகள், சல்வார்கமீஸ் கவுண்கள், பேபிகவுண்கள்,
- பேபிசூட்ஸ், ஸ்கேட் அன் பிளவுஸ், பஞ்சாபி வகைகள்
- சேட், T.சேட், கோட்சூட் வகைகள், சேட்டிங் சூட்டிங்ஸ், டெனிம் ரவுசர்கள்,

சோக்கோ ரவுசர்கள் இன்னும் பற்பல ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்:

**மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்**

(49223) இல.10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். T.P. 021 4590174 (21.15.14)



சாவகச்சேரியில் பிரபல கட்டட தொழில்நுட்ப ஆலோசனை சேவை நிலையத்திற்கு

**கட்டட வரைபட பயிலுநர்கள் தேவை**

G.C.E.(O/L) தராதரமுள்ள 25 வயதுக்குட்பட்ட இரு பாலாரும் சுயவிவரக்கோவையுடன் 21.04.2006 இற்குள் விண்ணப்பிக்கவும். (49193)

**ஏ.எஸ்.ஞானம்**
கட்டட ஆலோசகர்கள்,
கண்டிவீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 04 - 1933



மறைவு 26 - 03 - 2002

### அமரர் சபாபதிப்பிள்ளை வேலாயுதம்

(முன்னாள் மொறட்டுவ நாதன்ஸ் உரிமையாளரும் பிரபல வர்த்தகரும்)

**திதி: 11- 04 - 2006**

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
எம் இதயங்களில் குடியிருக்கும்
அன்பு நாயகரே! அருமை ஐயாவே!
பாசமிகு மாமாவே! உங்கள் நினைவுகள்
எம்மை விட்டுப் பிரியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"தங்கவாசா"
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(49063) (27.21.15.14)

உங்கள் பாசத்தால் வாடும்:
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## திருமுறை முற்றோதல் நிறைவு விழா

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் மாதம் ஒரு கோயில் ஒரு திருமுறை முற்றோதல் என்ற வகையில் யாழ். குடாநாடெங்குமுள்ள ஆலயங்கள் தோறும் சென்று திருமுறை முற்றோதலை நடத்தி வருகின்றனர்.

இதன் நிறைவு விழா எதிர்வரும் வியாழக்கிழமை பௌர்ணமி தினத்தன்று நல்லூர் நாயன்மார்கட்டு வெயிலுகந்த ஸ்ரீவிநாயகப்பெருமான் ஆலயத்தில் காலை 6 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

அன்று பிற்பகல் 4 மணிக்கு திருமுறைச் சுவடிகள், வீதி உலாவாகப் புறப்பட்டு யாழ். வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தை அடையவுள்ளன. மறுநாள் வெள்ளிக்கிழமை புதுவருடத்தினத்தன்று முதலாந் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும். (ஒ) (27)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 04 - 1945



மறைவு 23 - 03 - 2005

அமரர்

### செல்லத்துரை யோகேஸ்வரநாதன்

(பதில் செயலாளர், வலி. கிழக்கு தென்பகுதி பல நோ.கூ.சங்கம், நீர்வேலி)

*திதி: பூர்வபக்ஷ திரயோதசி (11- 04 - 2006)*

அன்பிலே மகுடமாய் பண்பிலே சிகரமாய்
அருமையான அப்பாவாய் எம்முடன் வாழ்ந்திரே!
ஆயிரம் சொந்தங்கள் அவனியில் இருந்தாலும்
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
இனிதாய் வாழ்ந்த நல்வாழ்வு போதுமென்று
இறைவன் உங்களை இடைநடுவே அழைத்தாலும்
இனிதே நீங்கள்காட்டிய நற்பாதை தனிலே
பணிவோடு நாம் காலடி வைத்திடுவோம்.
உங்கள் நினைவு எங்கள் உள்ளத்தில் - என்றும்
நிலைத்து நிற்கும் நினைவலைகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

V.T.S.வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**- குடும்பத்தினர்.**

(49178) (27.14.15.21)

## நீங்காத நினைவில்...

*என்றும் எங்கள் இதயங்களில் வாழும்*

**தந்தை**



அமரர் **கந்தையா வேலுப்பிள்ளை**

திதி: பங்குனி வளர்பிறை திரயோதசி

**தனயன்**



அமரர் **வேலுப்பிள்ளை ஜெயமகேஸ்வரா**

திதி: வைகாசி வளர்பிறை சதுர்த்தி

| | | |
|---|---|---|
| 21.11.1929 → | தோற்றம் | ← 18.06.1965 |
| 18.02.2000 → | மறைவு | ← 23.05.2004 |

எங்கள் அன்புத் தெய்வங்களின் நினைவாக 11.04.2006 அன்று கச்சாய் வடக்கு அருள்மிகு ஒட்டங்கேணி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் அன்னதான பூசையிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஏ.எம்.ரி அரைக்கும் ஆலை**
95/37, வேப்பம்குளம்,
வவுனியா.

**ஆத்தியடி ஒழுங்கை,**
**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

(சி-48709)(21.14.15)

தகவல்:
*திரு.திருமதி சிறிதரன் ஜெயமனோகரா*

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 04 - 1984



மறைவு 11 - 04 - 2004

### கந்தசாமி துஷியந்

நேற்றுப் போலுள்ளது
எல்லாமே...
உருண்டோடியது
இருவருடங்கள் - ஆனாலும்
இதயம் முழுவதும்
துள்ளித் திரியும்
சிட்டாக நீயடா
துஷி!

நம்ப மறுக்கிறது
நம் உள்ளம்
நாம் உள்ளவரை - என்றும்
நீ இருப்பாயடா
எம்மோடு,
உயிரினில் உயிராக
உணர்வினில் உணர்வாக...

பழைய முகவரி:
29/29, தேவாலய ஒழுங்கை,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

புதிய முகவரி:
இல.1, முதலாம் ஒழுங்கை,
அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

உன் நினைவில்
**அம்மா, அப்பா,**
**சகோதரர்கள்**

(49164)(21.15.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன (ஆண்/பெண்)

- Full Time/Part Time Lecturer
- Office Automation Course (Full Time) (MS Office)
- DTP (Full Time)
- Electronic Commerce } Part Time
- Tally Accounting Soft Ware } Part Time

நேரில் சகல ஆவணங்களுடனும் சமுகந்தரவும்
நேரம் 9 - 12 a.m.
11.04.2006 செவ்வாய், 12.04.2006 புதன்

**ACS**
Kopay Junction
Kopay.

(சி-48793)(21.14.17)



## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24.17.21.14)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090
0777 246117


## கேபிள் இணைப்பு

யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரம் வரை தொலைத் தொடர்பு கேபிள் இணைக்கும் பணிநடைபெற்றுவருகிறது. இந்தப் பணி 'சீறா' நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் வரை இப்பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டன்கீழ் தொலைத் தொடர்பு உப நிலையங்கள் சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய இடங்களில் அமையவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-31) (27)


உ

**தில்லையம்பதியான் துணை**
**சீர்மேவு யாழ்ப்பாணம்**
**கோண்டாவில் தில்லையம்பதி**
**அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்**

## பங்குனி உத்தரத் திருவிழா



*பங்குனி உத்தரம் முழுநிலா நாளில்*
*மகா கும்பாபிஷேகமதில் அம்பாளின்*
*ஆசியோடு கங்கைத் தீர்த்தமது*
*தில்லையம்பதி மண்ணை நனைத்ததால்*
*நம்மவர் நல்லருள் பெற்றனரே!*

இன்று (11-04-2006) செவ்வாய் காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகம், விசேட பூசை நண்பகல் மகேஸ்வர பூசை (அன்னதானம்) பி.ப.5 மணிக்கு வசந்தமண்டபபூசை, திருவூஞ்சல், 6 மணிக்கு அம்பாள் பூந்தண்டிகையில் தெருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

(49224)
(26.21.17.14)

**உபயம்:**
**அரச ஊழியர்களும், ஓய்வூதியம் பெறுவோரும்**

**பரிபாலனசபை**



## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



**திருமதி செல்வராணி கருணானந்தன்**

''காலத்தின் நியதி சில கட்டளைகளைத் தந்தாலும் ஞாலத்திற் பதிந்த சுவடுகளை அழிப்பதில்லை – சீலத்தில் செம்மையறம் தெரிந்து செய்பணியில் உயர்ந்துவிட்டால் எம்மையிலும் உண்டாகும் இன்பம்''

இன்று(11.04.2006) செவ்வாய்க்கிழமை மணிவிழாக்காணும் எமது சக ஆசிரியை தனது மூன்று தசாப்த ஆசிரிய சேவையில் இரு தசாப்தங்கள் எமது கல்லூரியில் சேவையாற்றி ஓய்வு பெறுகிறார். அவர் தமது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியுடன் நீடூழி வாழ சிவகாமி சமேத நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் (சி-48794)(21.17.14)
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா அலுவலர்கள்



## இனிய வாழ்த்துகள்

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் உயர் **திரு. தி.இராசநாயகம் ஐயா** அவர்களுக்கு இன்று (2006-04-11) கம்பன் கழகத்தினர் கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கின்றார்கள். மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக இரவுபகல் பாராது அயராது செயல்படும் அரச அதிபர் மாவட்டத்தில் நலிவுற்றோருக்காகவும் அல்லலுறும் மக்களுக்காகவும் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களின் நல னுக்காகவும் மனிதநேயத்துடன் பணியாற்றி வருகின்றார்.

மேலும், மாவட்ட மக்களுக்கு சிறப்புடன் பல்லாண்டுகாலம் பணிபுரிய எல்லாம்வல்ல உருத்திரபுரீஸ்வரன் அருள்புரிய அன்புடன் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சித்தாந்த பண்டிதர்,**
**வ.தயாபரசிவம்,**
**பொறியியலாளர்,**
**கச்சேரி, கிளிநொச்சி.**

(21.17.14.26) (சி/48797)



## சேவை நலன் பாராட்டு



**திரு. முருகேசு சீராளகந்தபாலன்**
உப அதிபர், யா/ செம்பியன்பற்று
அ.த.க. பாடசாலை

எமது பாடசாலையில் நீண்ட காலமாக ஆங்கில ஆசிரியராகவும், உப அதிபராகவும் சிறப்பாக சேவை புரிந்ததோடு, பகவானின் ஆன்மீக ஒளித்தடத்தில் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைத்த, உயர் திரு. மு. சீராளகந்தபாலன் அவர்கள் இன்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை தனது 57 வயதில் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவர் பகவானின் அருளாசியுடன் நிறைவாக வாழ வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/செம்பியன் பற்று அ.த.க.பா.

(49231) (27)



ஸ்ரீ ராம ஜெயம்

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



நாளை (12-04-2006) புதன்கிழமை காலை 8.30 - 10.30 மணிவரை உள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

நாளை முதல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம்

**கிருஷ்ணா நகை மாளிகை**

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 - 222 5046

எனும் புதுக்கடையை ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் தங்கள் குடும்ப சகிதம் வந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கிருஷ்ணா அடைவு கடை,
370, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

(49212)
(23.21.17.15)

உரிமையாளர்
ஏ.எஸ்.சுரேந்திரன் குடும்பம்.



## சித்திரை புத்தாண்டு மாபெரும் மலிவு விற்பனை



10.04.2006 தொடக்கம் 15.04.2006 வரையும் சிறப்புத் தள்ளுபடியுடன் தமது 29 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சகல விதமான புடைவைத் தினுசுகளையும் மலிவு விலையில் விற்பனை செய்கிறார்கள்.

புதிய சாறி ரகங்கள், புதிய சுரிதார், சோட்ஸ், சுரிதார் சோளிகிட், ஸ்கேட் அன் பிளவுஸ், ஆண்களுக்கான ரவுசர், சேர்ட் வகைகள் சிறுவர் சிறுமியர்களுக்கான எல்லா விதமான ரெடிமேட் வகைகள் அனைத்து ரக பட்டு சாறி வகைகளும் அடங்க விசேட தள்ளுபடியுடன் விற்பனை செய்கிறார்கள். உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்.

(சி/48792)(23.21.17.14)

**ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ**

இல. 13, 14, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

தொ.பே.: 2139

இல.79,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடத்தனையில் புதிய பாலம்

வரணி குடத்தனை பிரதான வீதியில் புதிய பாலம் அமைக்கப்பட்டு வருகின்றது. இப்பாதையில் இரு பக்கமும் சதுப்பு நிலம் அமைந்துள்ளதுடன் மாரி காலத்தில் தேங்கி நிற்கும் வெள்ளம் பாதையின் வடக்கே உள்ள வயல் நிலங்களுக்கு பாய்வதனால் வயல் நிலங்கள் பல உவர்த் தன்மையடைந்துள்ளன. அவை விவசாயம் செய்ய முடியாதபடி உவர் நிலங்களாவும் மாறியுள்ளன. இப்பாலம் கட்டுவதனால் மேலதிக வெள்ள நீர் தேங்கி நிற்காமல் அவ்வப்போது பாய்ந்து விடும் எனக் கூறப்பட்டுள்ளது. (ஒ-122) (24)

### தேவை

**நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர்கள், கணக்காய்வுப் பயிலுநர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.**

தொடர்பு: *140, பலாலி வீதி,* (49235)(32-16-15)
*(பரமேஸ்வராச்சந்தி),*
*பெற்றோல் செற் முன்பாக, திருநெல்வேலி.*

### இலவச பயிற்சி நெறிகள்

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியில் தலையலங்காரம், பூவேலை, கேக் ஐஸ்சிங் பயிற்சிநெறிகள் நாளை (12.04.2006) புதன்கிழமை பி.ப.2 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிற்சியில் பங்குகொள்ளவிரும்புவோர் அன்றைய தினம் பாடசாலைக்கு சமுகம்தரவும்.

**அதிபர்,**
(49238)(32-16-15) யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

### மரண அறிவித்தல்

**வன்னியசிங்கம் விக்கினேஸ்வரன் (விக்கி)**
*(நயினாதீவு)*

10.04.2006 அன்று பக்கம் 16இல் பிரசுரமாகிய மரண அறிவித்தலில் பரமேஸ்வரன் (கனடா), கலாஸ்ரீ சிவஞானலெட்சுமி, நீதிமணி (ஆசிரியை), கதிரேசபிள்ளை (பிரான்ஸ்), மஞ்சுளாதேவி ஆகியோரின் உறவுமுறை மைத்துனர் எனத் தவறுதலாக பிரசுரமாகியதை சகோதரர் எனத் திருத்தி வாசிக்கவும்.

*6ஆம் வட்டாரம்,* தகவல்:
*நயினாதீவு.* **இ.பேரின்பநாதன்**
(49221)(32-14-15) (மைத்துனர்).

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*திருமதி*
**சிவசுப்பிரமணியம் செல்வலட்சுமி**

தோற்றம்
**31-01-1937**

மறைவு
**23-03-2005**

ஆண்டுகள் ஒன்று
சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்.

*72/12, பிரம்படி லேன்,*
*கொக்குவில்.* (49234)(32-15-16) **சறோஜினிதேவி** (பேறாமகள்).

### மரண அறிவித்தல்

**S.A.குணரத்தினம்**
*(ஓய்வுபெற்ற* **Chief M.L.T Teaching hospital, Jaffna***)*



உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த S.A.குணரத்தினம் அவர்கள் 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னபூரணம் (ஓய்வுபெற்ற உபஅதிபர், உயரப்புலம் மெதடிஸ்த வித்தியாலயம், ஆனைக்கோட்டை) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி திரேசம்மா - செல்வநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியை, றோ.க.த.க. பாடசாலை, ஆனைக்கோட்டை), திருமதி ஞானரத்தினம் வேதநாயகம் ஆகியோரின் சகோதரனும் வைத்திய கலாநிதி P.P.திரவியம், எட்வேட் செல்வநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி), A.வேதநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,* *தகவல்:*
*ஆனைக்கோட்டை.* (49228)(32-15-16) **கு.அன்னபூரணம்** (மனைவி).

## சமய சந்நிதிகளில்...

யாழ்ப்பாணம்,ஏப்.11

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் ஆலய மணவாளக்கோல நவகுண்ட பக்ஷ சகஸ்ர 1008 கலச சங்காபிஷேகத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூசை, திருமுறைபாராயணம், அந்தர் பலி, பகிர்பலி, தானாதிகளும் முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகமும் இடம்பெறும்.

தொடர்ந்து விசேட பூசை, வீதியுலா என்பன இடம்பெறும்.
(202-122) (32)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.11

புத்தூர் காரைக்கூடல் வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பங்குனி உத்தர விழாவும் 1008 சங்காபிஷேகமும் இடம்பெறும். பிற்பகல் 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகும்.

எதிர்வரும் 22ஆம் திகதி 1008 சங்காபிஷேகமும் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். தினமும் வைரவப் பெருமானின் வீதியுலாவும் இடம்பெறும்.
(202)(32)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.11

வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய பார்த்திப வருட பங்குனி உத்தர திருக்குளிச்சி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
(203)(32)

★ ★ ★

தென்மராட்சி,ஏப்.11

கச்சாய் மஞ்சள்கேணி கண்ணகை அம்பாள் ஆலய சம்புரோஷண அஷ்டபந்தன மகாகும்பாபிசேகம் நாளை புதன்கிழமை காலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று காலை 8 மணி தொடக்கம் அடியார்களின் எண்ணெய்க்காப்புச்சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.
(117-203) (32)

★ ★ ★

புங்குடுதீவு,ஏப்.11

புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலய வருடாந்த பெரும் திருவிழா எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.
(188-203)(32)

★ ★ ★

தென்மராட்சி,ஏப்.11

அனலைதீவு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் ஆலய பெரும் திருவிழா கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.
(117-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.11

உடுப்பிட்டி பெரியதம்பிரான் சிவன் ஆலய பெரும் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.
(203) (32)

★ ★ ★

காரைநகர்,ஏப்.11

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இவ்வாலயப் பெருந்திருவிழா கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
(203)(32)

## வாழ்த்துக்கள்



இன்று கொழும்பு கம்பன் கழகத்தினரால்
கௌரவப்பட்டமளித்துக் கௌரவிக்கப்படும்
கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்

**உயர்திரு.தி.இராசநாயகம் ஐயா**

அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.
திரு.தி.இராசநாயகம் ஐயா அவர்கள் மாவட்டத்தின் நலனுக்காக அயராது செயலாற்றி வருபவர். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியிலும் விவசாயிகளின் நலன்களிலும் மிகவும் ஈடுபாடுகொண்டவர். துயருறும் மக்களுக்காக மனிதநேயத்துடன் செயற்படுபவர்.
அவர்கள் பல்லாண்டு காலம் நலமுடன்
வாழ எமது நல்வாழ்த்துக்கள்.

**பணியாளர்கள்**
**கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**பீரந்தன்.**

(சி/48799)
(24-32-15-16)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

### 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**தோற்றம்** **மறைவு**
**01-02-1948** **23-03-2006**

**சின்னத்துரை பெருமாள்பிள்ளை**



எனது சிற்பாலயத்தில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பணிபுரிந்த எனது மாமாவின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டி இன்று (11-04-2006) செவ்வாய்க்கிழமை இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு எனது சிற்பாலயத்தின் சார்பிலும் குடும்பத்தினர் சார்பிலும் வேண்டுகின்றேன்.

கலைமகள் வீதி, **இராஜதுரை பிரபாகரன் (பிரான்),**
அரியாலை. **ராஜன் சிற்பாலயம்,**
(49240)(26-32-15-16) **பிள்ளையார் வீதி, திருநெல்வேலி.**

### நெல்லியடி
### தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலய
### மணவாளக் கோலவிழா
*11.04 2006 செவ்வாய்க்கிழமை*

**காலை 7.30 மணிக்கு:** மூல மூர்த்திக்கு பஞ்சகுண்ட 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் இடம்பெறும்.

**மாலை 4.30 மணிக்கு:** தவில் நாதஸ்வர இசை

**மாலை 5.30 மணிக்கு:** விசேட பூசையும் பூந்தண்டிகையில் சுவாமி திருவீதியுலாவும் இடம்பெறும்.

ஆனந்தக் காவடி/பால் காவடி காலை 6.30 மணிக்கு நவிண்டில் குலனையமபதி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

**அனைவரும் வருக! அருளமுதம் பெறுக!**

(சி/48800)(32-16-15) **-ஆலய பரிபாலன சபையினர்.**





**இப் புதுவருடத்தில் சேமித்தால் கை நிறைய பரிசுகள்**

- ஏப்பிரல் 14ம் திகதி முதல் 30ம் திகதி வரை ரூபா.10,000/- அல்லது அதற்கு கூடிய அளவில் அவுருது வாசனா சான்றிதழ்களை கொள்வனவு செய்யும் உங்களுக்கு அழகிய பயணப் பொதி அல்லது பாடசாலை பை ஒன்று இலவசம்!
- அச்சான்றிதழ்களை மாற்றாமல் 2006 டிசம்பர் 31ம் திகதி வரை வைத்திருந்தால் இறுதி சீட்டிழுப்பில் வெற்றி பெறும் 500 அதிஷ்டசாலிகளுக்கு ரூபா. 5,000/- வீதம் பரிசுகள்!

அது மட்டுமல்ல,

- 14ம் திகதி புது வருட தினத்தில் எந்தவொரு சேமிப்பு அல்லது நிலையான வைப்பு கணக்கில் ரூபா.100,000/- [illegible] பொதி அல்லது பாடசாலை பை ஒன்று இலவசம்!
- புது வருட கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்பிரல் 14ம் திகதி சகல தேசிய சேமிப்பு வங்கி கிளைகள், அஞ்சல் வங்கி கிளை மற்றும் சேமிப்பு கடைகள் ஆகியவை மு.ப. 8.00 முதல் பி.ப. 1.00 வரை திறந்திருக்கும். அன்றைய தினம் கொடுக்கல் வாங்கல் செய்யும் சகலருக்கும் புது வருட பரிசு உரித்தாகும்.

இவையனைத்தும் இந்த புது வருடத்தில் NSB அவுருது வாசனா மூலம் உங்களுக்கே.

மகிழ்ச்சி பொங்கும் புது வருடம்!

NSB தேசிய சேமிப்பு வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப் பிள்ளையார் துணை

# திருமண அழைப்பு

இடம்: அருள்மிகு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
சுபநேரம்: காலை 9.15 - 10.15 மணிவரை
காலம்: 12.04.2006, பங்குனி 29 நாள் புதன்கிழமை

மணமகன் செல்வன்
M.S.சதீஸ்குமார் (குட்டி)
(தவில் வித்துவான்)

மணமகள் செல்வி
A.பிருந்தா (B.A.)
(ஆசிரியை, யா/புற்றளை மகா வித்தியாலயம்)

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் நல்வரவு கூறி அழைக்கின்றோம்.

தவில்வித்துவான்
திரு.M.சின்னராஜா தம்பதிகள்
சின்னப்பிள்ளையார் கோயிலடி,
V.M.வீதி, பருத்தித்துறை.

திரு.ந.அசோகன் தம்பதிகள்
சின்னப்பிள்ளையார் கோயிலடி,
V.M.வீதி, பருத்தித்துறை.

*வரவேற்புபசாரம்: 13.04.2006 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மணமகனில்லத்தில் நடைபெறும்.*
**வரவேற்பாளர்கள்:**
*திரு பல்லவி இராஜதுரை கலைச்செல்வன் தம்பதிகள்*
*திரு.M.S.விஜயகுமார் தம்பதிகள், திரு.சிவசாமி சிவமோஹன் தம்பதிகள்*
(சி-48906)
(18-34-49)


# IBMS

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 15.04.2006 } காலை 10.30 மணி
பிரிவு II : 17.04.2006 }

**Diploma Courses**

- Diploma in Microsoft Office
- Diploma in Internet Technology
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hardware Engineering
- Diploma in Visual Basic . NET

Head Office : # 209, Manipay Road,
Vaitheeswara Junction,
Jaffna.
T.P. No. : 021 222 8232

Branches : * NMMV Road, Nelliady
* Sangaththanai,
- Chavakachcheri


## மக்கள் வங்கிக் கிளைகள் திறந்திருக்கும்

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு, வாடிக்கையாளரின் நன்மைகருதி இன்றும் எதிர்வரும் 13ஆம் திகதியும் மக்கள் வங்கியின் சகல கிளைகளும் நீடித்த கரும பீடங்களும் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் எதிர்வரும் 14ஆம் திகதியும் (புத்தாண்டு தினம்) காலை 8 மணிமுதல் சுபகரும கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் மேற்படி கிளைகள் திறந்திருக்கும் என்று மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ)


**வேலையாள்கள் தேவை**

*எமது நிறுவனத்திற்கு லிகிதர், விற்பனையாளர் ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது.*
*15.04.2006 இற்குமுன் நேரில் சமுகம் தரவும்.*
*தொடர்பு: **தரன் வணிக நிலையம்***
*130, 132,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

## வேலையாள் தேவை

மேற்படி சுப்பமார்க்கற்றுக்கு
அனுபவமுள்ள ஆண்/ பெண்
வேலையாள்கள் தேவை.
நேரில் வரவும்
ஜீவா (f) பூட் ஸ்ரவ் சப்ளையர்
43/4, பலாலி சாலை,
திருநெல்வேலி.


## கண்ணீர் அஞ்சலி

சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ். தெற்குப் பிரதேசத்தின் ஆலோசகரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவின் தனாதிகாரியுமான திரு A.J.குலசிங்கம் அவர்களின் மகள்

**குலசிங்கம் ஆன்யரிந்தா**

அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சென். ஜோன் அம்புலன்ஸ் யாழ்.தெற்குப் பிரதேசம். (49245) (18-34-49) *மாவட்ட ஆணையாளரும், அங்கத்தவர்களும்*


## சக்சஸ் மல்ரி ஹவுஸ்

*புத்தூர் சந்தி,* **S.M.H.** *மீசாலை.*

9 ஆவது அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

பெயர்: க. தாட்சாயினி
இலக்கம் : 338
விலாசம்: மாசேரி, வரணி

*புத்தூர் சந்தி, மீசாலை.* *உரிமையாளர்* S.M.H.

**Information & Communication Technology**

ICT

Grade- (10-11) UNIT-03

தரம் 10 மாணவர்களுக்கு அலகு-03 இற்கான தமிழ் மொழி மூலமான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

Days :- Sat, Sun, Mon
Time :- 5.30 - 6.30

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.


## கண்ணீர்க் காணிக்கைகள்



எம் மண்ணின் மைந்தனும் எமது வித்தியாலய பழைய மாணவனும் எம் வித்தியாலய ஆசிரியை திருமதி கலாசிறி நீதிமணி இராஜேஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரரும் திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவரும் தமிழ்த் தேசியப் பற்றாளருமான

அமரர் மாமனிதர்

**வன்னியசிங்கம் விக்னேஸ்வரன்**

அவர்களுக்கு எம் வித்தியாலயத்தின் இதய அஞ்சலிகள். அமரரின் ஆத்மா சாந்தியடையவும் குடும்பத்தார் மன அமைதி அடையவும் நயினை நாகபூஷணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

(49242)
(18-34-49)

பாடசாலைச் சமூகம்,
யா/ நயினாதீவு மகாவித்தியாலம்.

### திருத்தம்

மானிப்பாய் *கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை இயன்முறைச் சிகிச்சைச்* சேவை தொடர்பாக கடந்த 9 ஆம் திகதி உதயனில் 17 ஆம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில்-

இயன்முறைச் சிகிச்சை மேலதிகமாக வழங்கப்படும்நாள்கள் வெளியாகியிருந்தன.

ஏப்ரல் 11, 13, 14, 15 ஆகிய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை சிகிச்சை அளிக்கப்படும் என்பதே சரியாகும். 12 ஆம் திகதி சிகிச்சை இடம் பெறும் என்று இருப்பது தவறு ஆகும். வாசகர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## கண்ணீர் அஞ்சலி



உதயம் *14 - 04 - 1914*
மறைவு *08 - 04 - 2006*

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க முன்னாள் செயலாளர்

**சின்னப்பு சேனாதிராஜா(குட்டி)**

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சு)

பரிந்த பார்வையில் பண்புள்ளங்கொண்டவர்
பாரிலுள்ளோர்களில் மீதிலன்பானவர்
புரிந்த நிலையில் பழகிவிடும் தன்மையானவர்
சிரித்த முகத்தினன் சிறந்த நற்கொடையினர்
ஆசிமட அரசடி விநாயகர் ஆலய
வளர்ச்சியில் அரும்பாடுபட்டவர்
உங்கள் இறப்பால் மலரில் தான் கண்ணீர்
வடிந்ததே!

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆசிமட அரசடி விநாயகரை வேண்டுகிறோம்.*

எல்லாம் அவன் செயல்

கோண்டாவில் கிழக்கு.
*(49355)*
*(18-34-49)*

நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை,
கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்.


**ராஜா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
**மெர்க்குரிப் பூக்கள்**
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30,2.30,6.30,9.00,(மு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகர்ஸ்** சுன்னாகம்

விஜயகாந்த் நடித்த **சுதேசி**
அடுத்த வெளியீடு: **டிஸ்யும்**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

அர்ஜுன், மீனா, ஜோதிகா, மணிவண்ணன் நடித்த
**ரிதம்**
14.04.2006 அன்று
**கள்வனின் காதலி**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (மு.நே.)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் *10.11.1918*
மறைவு *14.03.2006*

எமது திணைக்களத்தின் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் த.கந்தசாமி அவர்களின் மாமனார்

**அமரர் வே. சரவணமுத்து (ஆசைப்பிள்ளை)**

அவர்களின் நினைவு நாளில் நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக வேண்டுகிறோம்.

**கூ.அ.உ. ஆணையாளரும் சக உத்தியோகத்தர்களும்**
**கூ.திணைக்களம், கிளிநொச்சி.** (49354)
(18-34-49)

# மரண அறிவித்தல்கள்

## சீமாம்பிள்ளை துரைரத்தினம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சீமாம்பிள்ளை துரைரத்தினம் அவர்கள் நேற்று (10.04.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீமாம்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் நீற்றா ஜெயதேவியின் அன்புக் கணவரும் றஞ்சிதம், லீலா, நிர்மலா, பாலன், சீலன் மற்றும் காலஞ்சென்ற சவுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சதீஸ்,உதயதாரணி, சாள்ஸ் அன்ரனி, உதயதர்சிகா, தர்சன் மற்றும் காலஞ்சென்றவர்களான கனிஸ்ரன், ஜெனிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(11.04.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் பொதுச் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு
(49356)
(18-34-49)

**தகவல்:**
**நீற்றாஜெயதேவி**
**(மனைவி).**

## திருமதி சிவசுப்பிரமணியம் நாகம்மா



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் நாகம்மா அவர்கள் நேற்று(10.04.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினம்மா, திருநாவுக்கரசு மற்றும் அன்னம்மா, துரைராசா, பூபதி, சின்னராசா, நடராசா(கிளி), கணேஸ்வரி(நீர்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவஞானவதி, பூபதி மற்றும் சிவலிங்கம்(சின்னத்துரை, உரும்பிராய் வடக்கு) ஆகியோரின் மைத்துனியும் யோகநாதன் (லண்டன்), ஜெயக்குமார் (ஜேர்மனி), விஜயகுமார் (சந்திரன், விநாயகர் விற்பனை நிலையம் -உரும்பிராய் வடக்கு), காலஞ்சென்ற இராசகுமார்(கிளி) ஆகியோரின் பாசமிகு தாயும் லீலாவதி (லண்டன்), ஷாமினி, கமலவேணி (ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி), வதனா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் பகீரதன் - தர்சிகா(லண்டன்), வித்தியா (லண்டன்), பவித்திரன் (லண்டன்), விஜந்தன்(லண்டன்), சதீஷன் - கலையரசி( கனடா), தர்சன், பிரியகாந், சுவேதா( வேம்படி மகளிர் கல்லூரி), திவ்யா (வேம்படி மகளிர் கல்லூரி), சரண்யா(யா/இந்து மகளிர் பாடசாலை), டிலோஜன்(சென். ஜோன் கல்லூரி), ரம்மியா - செல்வக்குமரன்(ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் லக்சயாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.04.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருளன் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
தொ.பே.: 021 222 5327
(49247)
(18-34-49)

**தகவல்:**
**விஜயகுமார்(சந்திரன்),**
**ஜெயக்குமார்**
**(மகன்மார்).**

## திருமதி இராசையா சோதிமலர்

மலர்மகள், அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த திருமதி இராசையா சோதிமலர் அவர்கள்நேற்று(10.04.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கலைமகள் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளையதம்பி இராசையா அவர்களின் அன்பு மனைவியும் அட்டிறந்தை - பொன்னர் தம்பதியினரின் இளைய புதல்வியும் திருமதி கோணாமலை சரஸ்வதி, அமரர் செல்லையா, அமரர் மகாலிங்கம், அமரர் திருமதி தங்கச்சியம்மா பொன்னுத்துரை, திருமதி தேவராசா கனகமணி, திருமதி சிவபாக்கியம் நல்லம்மா (அரியாலை), கந்தசாமி (மெக்கானிக்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி ரேவதி தமிழழகன், காலஞ்சென்றவர்களான கரன், இந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் நடராசர் தமிழழகனின் அன்பு மாமியும் செல்வி ஜோதி தமிழழகனின் பேர்த்தியும் திருமதி சின்னையா சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான மாணிக்கம் இராசம்மா, மகேசன் மாணிக்கம், இ.நடேசு ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.04.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-48909)(18-34-49)

தகவல்:
**இ.இராசையா**
(கணவன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் மீது

# கனேடிய அரசின் தடையைக் கருத்தில்கொண்டு அரசு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும்

## அனைத்துக்கட்சி கூட்டத்தில் ஜே.வி.பி., ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு,ஏப்.11

விடுதலைப் புலிகள் இயக்கத்தை கனேடிய அரசு தடைசெய்திருப்பதை இலங்கை அரசு முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட வேண்டுமென்று ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் நேற்று அரசிடம் கூட்டாக வலியுறுத்தியிருக்கின்றன.

அமைதி முயற்சிகள் தொடர்பான அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் தலைவர்கள் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்பதாலேயே கனேடிய அரசு அதனைத் தடைசெய்துள்ளது எனவும் இதனை அரசு கவனத்திற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும் 'மஹிந்த சிந்தனை'யில் குறிப்பிட்டபடியே அமைதி முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்கிவருவதாக மேற்படி கட்சித் தலைவர்கள் இங்கு குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றனர்.

இங்கு உரையாற்றிய ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, அமைதி முயற்சிகளுக்குத் தமது கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென்றும், தற்போது செயலிழந்துள்ள அரசமைப்புச் சபையை இயங்க வைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி னார்.

முஸ்லிம்களைக் கொண்ட படையணியொன்று உருவாக்கப்படுவது குறித்து நேற்றைய இந்தக் கூட்டத்தின்போது ஜாதிக ஹெல உறுமய கடுமையான ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே இராணுவத்தில் முஸ்லிம்கள் இருப்பதை சுட்டிக்காட்டிய ஜாதிக ஹெல உறுமய, முஸ்லிம்களை இராணுவத்திற்குள் உள்வாங்குவதில் எந்த ஆட்சேபனையும் இல்லையென்று தெரிவித்துள்ளது.

நேற்றைய இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மேலக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் நல்லையா குமரகுருபரன், ஜெனிவாவில் காணப்பட்ட உடன்பாடுகளை அரசு அமுல்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செய்யாமல் நம்பிக்கையை ஏற்படுத்தாமல் போனால் பேச்சுகளை முன்னெடுப்பது சிரமமென்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(எ-க)

## இராணுவ வாகனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித முன்னேற்ற நடு நிலையத்திற்கு (கியூடெக்) சொந்தமான 'ஹை-ஏஸ்' வானே இந்த அனர்த்தத்தில் சிக்கியது.

இராணுவ வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த படையினரில் குறைந்தது ஐந்து பேர் சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது.

கியூடெக் வாகனத்தில் பயணம் செய்த அதன் பணியாளர்கள் நால்வரில் இருவர் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தனர். வாகனத்தின் சாரதியும், மற்றொரு பணியாளரும் காயமடைந்தனர்.

மிருசுவில் இராணுவச் சோதனைத் தடை நிலையத்துக்கு முன்பாக, கடை ஒன்றின் அருகே நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த சக்திவாய்ந்த கிளைமோர் கண்ணியே தூரக் கட்டுப்பாட்டுக் கருவியின் உதவியுடன் இயக்கி வெடிக்கப்பட்டிருக்கின்றது என்று இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. ஆனால், வீதியோரம் மின்கம்பம் ஒன்றில் கட்டிவைக்கப்பட்டிருந்த கண்ணியே வெடித்தது என்று மற்றொரு தகவல் தெரிவித்தது. கிளைமோர் வெடித்த இடத்தில் நின்றிருந்த மரம் ஒன்று கருகிக் காணப்பட்டது.

கண்ணி வெடித்த கையோடு படையினர் ஏ-9 வீதியூடான போக்குவரத்தை அந்தப் பகுதியில் தடைசெய்தனர். பெரும் எண்ணிக்கையில் துருப்பினரும் அந்த இடத்தில் குவிக்கப்பட்டிருந்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான இராணுவ வாகனம் அந்த இடத்திலிருந்து உடனடியாகவே அப்புறப்படுத்தப்பட்டது. காயமடைந்த சிப்பாய் உடனடியாக மிருசுவில் படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு விரையப்பட்டார். உயிரிழந்த படையினரின் சடலங்களும் சம்பவ இடத்தில் காணப்படவில்லை.

குடாநாட்டிலும் வன்னியிலும் மனிதாபிமான மற்றும் தொண்டுப் பணிகளில் ஈடுபட்டு வரும் கியூடெக் - ஹரித்தாஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான ஹை-ஏஸ் வான் வடமராட்சி கிழக்கிலிருந்து ஏ-9 வீதி வழியே யாழ்.நகர் நோக்கி வந்துகொண்டிருந்த சமயமே கண்ணியில் சிக்கி இருக்கின்றது. இந்த அனர்த்தத்தில் சிக்கி அந்த நிறுவனத்தின் களப் பணியாளர்களான செல்வேந்திரா பிரதீப்குமார் (வயது 27), எஸ்.கந்தாபத்மநாபன் (வயது 54) ஆகியோரே உயிரிழந்திருக்கின்றனர். பணியாளர்களான தற்பெருநாதன் (வயது 47) மற்றும் இன்னொருவர் காயமடைந்திருக்கின்றனர். இருவரது உடல்களும் கண்ணிச் சிதறல்களால் சல்லடையாக துளைக்கப்பட்டிருந்தன. இரு சடலங்களும் நேற்று மாலை கொடிகாமம் பொலீஸாரால் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டன. காயமடைந்த இரு பணியாளர்களும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தனர்.

கிளைமோர் வெடித்த போது அதன் ஓசை பெரிய அளவில் எழவில்லை. எனினும் சேதங் கள் அதிகமாக இருந்தன என்று சம்பவத்தை சற்றுத் தொலைவில் நின்றவாறு நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தால் மிருசுவில் பகுதியில் நேற்று மாலை பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. சம்பவம் நடந்த பகுதியில் காணப்பட்ட பலர் இராணுவத்தினரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் நேற்று மாலை விடுவிக்கப்படவில்லை என்று ஒரு தகவல் தெரிவித்தது. சிறிது நேரம் தடைப்பட்டிருந்த ஏ-9 போக்குவரத்து பின்னர் வழமை போன்று இடம்பெற்றது. (ஐ-எ-ஒ-7-13-15-31-117) (25)

## மக்கள் படை வருத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். தவிர்க்கமுடியாத சூழலினால் ஏற்பட்ட இழப்பிற்காக வருந்துகிறோம்.

எமது தாயக நிலத்தை ஆக்கிரமித்து நிற்கும் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களுக்கு அருகில் இருப்பதையோ அல்லது அவர்களது வாகனங்களுக்கு அருகில் செல்வதையோ தவிர்த்துக்கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்பேசும் உறவுகள் எமது தாயக பூமியில் எங்கு தாக்குதலுக்குள்ளாகினாலும் அல்லது கொல்லப்பட்டாலும் அதற்கு பொங்கியெழும் மக்கள்படை தனது பதிலடியைக் கொடுத்தே தீரும். துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைகிறோம் - அவர்களை முடக்குகிறோம் என ஜெனீவாவில் வாக்குறுதியளித்த இலங்கை இனவாத அரசு இன்று தனது புலனாய்வு அமைப்பு மற்றும் இராணுவ யந்திரத்தை வைத்து இந்த ஆயுதக் குழுக்களைப் பாதுகாத்து வளர்ப்பதோடு தமிழ் உறவுகள் மீதான தாக்குதலை என்று மில்லாதவாறு முடுக்கிவிட்டுள்ளது. இன்றைய தினம் (திங்கள்) மட்டக்களப்பில் துணை இராணுவக் குழுக்கள் தமது அலுவலகத்தை வெளிப்படையாகவே திறப்பதற்கு சகல வழி வகைகளையும் செய்து கொடுத்துள்ள இந்த அரசிடமிருந்து நாம் நீதி நியாயத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

வரும் நாள்களில் இராணுவத்தினராலோ அவர்களது புலனாய்வு அமைப்பினராலோ அன்றித் துணை இராணுவக் குழுக்களாலோ எமது மக்கள் தாக்கப்படுவார்களானால் எங்கள் வழியில் சென்று நாம் தொடர்ந்தும் பதிலடிகொடுப்போம்எமது தாக்குதல்களைத் தீவிரமாகத் தொடுப்போம்- என்று அதில் உள்ளது.

## மாமனிதர் விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் கதறி அழுது மாமனிதருக்குத் தங்கள் அஞ்சலிகளைச் செலுத்தினர். வவுனியாவிலிருந்து நேற்று முற்பகல் 11.45 மணியளவில் மாமனிதர் விக்கியின் பூதவுடல் கிளிநொச்சி கல்வி வலயப் பணிமனைக்கு எடுத்துவரப்பட்டது. அங்கிருந்து பூதவுடல் 'பாண்ட்' இசை முழங்க, போராளிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள் அணிவகுத்து வர, ஊர்வலமாக பண்பாட்டு மண்டபத்துக்கு கொண்டுவரப்பட்டது.

தமிழீழத் தேசியக் கொடி போர்க்கப்பட்ட பூதவுடலுக்கு பெரும் எண்ணிக்கையானவர்கள் கண்ணீர் மல்க மலர்மாலை சாத்தி உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்த உறுப்பினர் வே. பாலகுமாரன், புதுவை இரத்தினதுரை, கேணல் ஜெயம், கேணல் தீபன் உட்பட பெரும் எண்ணிக்கையான போராளிகளும் அஞ்சலி செலுத்தினர். இதற்கிடையில் மாமனிதர் விக்னேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்தும், அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் இன்றைய தினம் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்தத் துக்கதினத்திற்கான அழைப்பை திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையும், மட்டக்களப்பு மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியமும் தனித்தனியே விடுத்திருக்கின்றன.

(எ-க-7-13)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளார் என்றும்

அதனால், வன்னிக்கான விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

(எ-3)(33)


பூனி வேசல்

(மாட்டீத்தலைவர் ...)

A/L 2006

இந்து நாகரிகம் கருத்தரங்கு

(சிறுதுறிப்புகள்)

காலம்: 12.04.2006

பின் பகல் 1 - 5 மணிவரை

By:S. ஜெயக்குமார்

வெளி மாணவரும் பங்குபற்றலாம்.



SCC

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna,

T.P: 021 2225170, 0777846811

Kids Programming (Year 3-9)

G.C.E O/L - ICT

G.C.E A/L - GIT

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறை கால பயிற்சி நெறி

Start On :- 14,15.04.2006



அகரம் என்றால் ஆரம்பம்

மாபெரும் கணினிக் கருத்தரங்கு.

எங்கே? எப்போது?

விபரங்கள் வெகுவிரைவில்...


## மட்டக்களப்பில் நேற்று கருணா அலுவலகம் திறப்பு

கருணா குழுவினரின் உத்தியோகபூர்வ அரசியல் அலுவலகமொன்று நேற்று மட்டக்களப்பு நகர்ப் பகுதியிலுள்ள கோவிந்தன் வீதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

'மீனகம்' என்ற பெயரில் இயங்கவுள்ள இந்த அரசியல் அலுவலகம் கருணா குழுவினரின் தலைமைச் செயலகமாக இனிவரும் காலங்களில் இயங்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து கருணா விலகிய பின்னர் அவர்கள்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய இரண்டாவது ஆண்டு பூர்த்திதினம் நேற்று என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-7-13)

## மட்டக்களப்பில் இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,ஏப்.11

மட்டக்களப்பு கல்லடி வேலூர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்றிரவு நடைபெற்ற நெல் குத்து விழாவில் கலந்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சுதாகரன் சுதாரூபன் (வயது 17) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

இவர் அண்மையில் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-12-13)

## அறநெறிப் பாடசாலை ஆண்டுவிழா

மானிப்பாய்,ஏப்.11

மானிப்பாய் ஸ்ரீ மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலையின் அகவை ஐந்து நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

அறநெறிப் பாடசாலை அதிபர் சமூக ஜோதி கா.கணேசதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரனும், சிறப்புவிருந்தினர்களாக இந்துசமய அபிவிருத்தி உதவியாளர் (வலிகாமம்) த.பிரதீஸ்வரன், உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் எஸ்.பஞ்சாட்சரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.(எ-203)

## கண்ணீர்க் காணிக்கை



உதயன் சந்தைப் படுத்தல் பிரிவில் கடமையாற்றும் செல்வேந்திர பிரசன்னா அவர்களின் அன்புச் சகோதரனான

**செல்வேந்திர பிரதீப்குமார்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். - சந்தைப்படுத்தல் பிரிவு.

## மரண அறிவித்தல்கள்

### சண்முகரட்ணம் கந்தாபத்மநாபன்

(சிறுவர் திட்ட முகாமையாளர் கியூடெக்)



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகரட்ணம் கந்தாபத்மநாபன் அவர்கள் நேற்று (10.04.2006) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஜெயக்குமாரி (மக்கள் வங்கி, யாழ்.பிரதான வீதி) அன்புக் கணவரும் சாமகீதன், நசிகேதன், அபர்னா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.04.2006) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும்.

*74, குருசேகர வீதி,*
*சுண்டுக்குளி.*
*021 4590006*

(49351) (25-34-49)

தகவல்: மனைவி.

### திருமதி புனிதவதி விநாயகமூர்த்தி

யாழ்.வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று (10.04.2006) திங்கட்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இல.12, கடைச்சுவாமியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(49360)(25-34-49)

தகவல்: ந.சிவபாலன் (மருமகன்). 021 222 5673

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,
2006 மே

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

## புவியியல் - III


ஒரு மணித்தியாலம் — திரு. P.S.குமரன் B.A. (Hons) யாழ்.

(புவியியல் - III இல் பகுதி I 04.04.2006 ஆம் திகதி கல்விச்சுடரில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது.)



12. இந்தியப் படத்தில் நிழற்றப்பட்டுள்ள பகுதியில் பயிராக்கப்படும் பிரதான பயிர இனம் யாது?
i. நெல் ii. பருத்தி iii. தேயிலை iv. கோதுமை

13. உலகில் அதிக நிலக்கரிப் படிவு காணப்படும் இடங்கள் எவை?
i. ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியும், ஆசியாவின் தென்பகுதியும்.
ii. ஆசியாவின் தென்பகுதியும், ஆசியாவின் கிழக்குப் பகுதியும்.
iii. வட அமெரிக்காவின் மத்திய பகுதியும், கிழக்குப் பகுதியும்.
iv வட அமெரிக்காவின் மத்திய பகுதியும், ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியும்.



14. ஐக்கிய அமெரிக்காப் படத்தில் நிழற்றப்பட்டுள்ள பகுதியில் பயிராக்கப்படும் பிரதான பயிர் இனம் யாது?
i. நெல் ii. பருத்தி
iii. தேயிலை iv. கோதுமை
15. உலகில் கோதுமை, நெல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு யாது?
i. சீனா ii. ஐக்கிய அமெரிக்கா iii. இந்தியா iv. ரஷ்யா
16 உலகில் அதிகளவு வர்த்தகம் செய்யப்படும் பொருள் யாது?
i. பெற்ரோலியம் ii. கோப்பி iii. கோதுமை iv. புடைவை
17. உலகில் பு4 கூட்டமைப்பு நாடுகள் என அழைக்கப்படும் நாடுகள் எவை?
i. ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ்
ii. பிரேசில், ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ்
iii. ஜப்பான், ஜேர்மனி, இந்தியா, பிரான்ஸ்
iv. ஜப்பான், ஜேர்மனி, இந்தியா, பிரேசில்
18. இந்தியாவில் இரும்புத் தாதுச் சுரங்கங்கள் காணப்படும் பகுதிகளாவன.
i. ஜாம்செட்பூர், பத்திராவதி ii. சிங்பும், மயூர்பாஞ், பஸ்டர்
iii. பஸ்டர், துர்க்காபூர் iv. அசென்சோல், சேலம்



19. படத்தில் நிழற்றிக்காட்டப்பட்டுள்ள மீன்பிடித் தளம் யாது?
i. டொக்கர் மேடைப் பகுதி
ii. கிராண்ட் பாங் மேடைப் பகுதி
iii. வோஜ் மேடைப் பகுதி
iv. சபில்தீவு மேடைப் பகுதி
20 இலங்கையில் இறப்பர் உற்பத்தி இடம்பெறும் மரபுரீதியற்ற மாவட்டம் யாது?
i. கேகாலை ii. புத்தளம் iii. மொனராகலை iv. காலி
21. இலங்கையில் தெங்கு உற்பத்தியின் புதிய போக்குகளில் ஒன்று
i. இடைப்பயிர்கள் வளர்த்தல்
ii. துருவப்பொருள்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளமை
iii. உள்நாட்டுச் சந்தைவாய்ப்புக் குறைவடைதல் iv. விளைநிலப்பரப்புக் குறைதல்
22. உலகில் அதிக பயணிகள் மோட்டார் கார் உற்பத்தி செய்யும் நாடு எது?
i. ஜப்பான் ii. ஐக்கிய அமெரிக்கா iii. இந்தியா iv. தென்கொரியா



23. இந்தியப் படத்தில் நிழற்றப்பட்டுள்ள பகுதியில் பயிராக்கப்படும் பிரதான பயிர் இனம் யாது?
i. நெல் ii. பருத்தி iii. தேயிலை iv. கோதுமை

24. இலங்கையில் கார் உற்பத்தியில் ஈடுபடும் □மைக்ரோ கார் நிறுவனம்□ அமைந்துள்ள இடம் எது?
i. கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயம்.
ii. கொக்கல சுதந்திர வர்த்தக வலயம்.
iii. பியகம சுதந்திர வர்த்தக வலயம்.
iv. பொல்காவல சுதந்திர வர்த்தக வலயம்.
25. இலங்கையில் பெருந்தோட்டக் காடு வளர்ப்பு அதிகமாகக் காணப்படும் மாவட்டங்கள் எவை?
i. பதுளை, மாத்தளை ii. நுவரெலியா, இரத்தினபுரி
iii. நுவரெலியா, பதுளை iv. கண்டி, இரத்தினபுரி
26. Exxon Mabil என்பது
i. உலகில் மிகப் பெரிய மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனம்
ii. உலகில் மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நிறுவனம்
iii. உலகில் மிகப் பெரிய கப்பல் உற்பத்தி நிறுவனம்
iv .உலகில் மிகப் பெரிய இரும்பு உருக்கு உற்பத்தி நிறுவனம்
27. Imit என்பது?
i. வடகனடா, கிறீன்லாந்தில் வாழ்கின்ற எக்சிமோவர்
ii. ஆபிரிக்காவின் புஸ்மன் இனத்தவர்.
iii. ஆசியாவின் கேர்க்கிஸ் இனத்தவர்.
iv. கலாகாரியின் பிஜீமீஸ்கள்.
28. குடிவிவரணவியல் நிலைமாற்றம் என்னும் பதம் பயன்படுத்தப்படுவது
i. தேறிய குடித்தொகையளவை விவரிப்பதற்கு
ii. உயர்பிறப்புவீதம்/உயர்இறப்பு வீதத்திலிருந்து தாழ் பிறப்பு வீதம் /தாழ் இறப்பு வீதத்திற்கு மாறுவதை விவரிப்பதற்கு.
iii. விருத்தியடைந்து வரும் நாடுகளின் பிறப்புவீதத்தை விவரிப்பதற்கு
iv. விருத்தியடைந்த நாடுகளின் பிறப்புவீத்தை விவரிப்பதற்கு
29. அலுமினிய உற்பத்திக்கான பிரதான மூலப்பொருள் யாது?
i. சுண்ணாம்புக்கல். ii. பொக்சைட்.
iii. இரும்புத்தாது. iv. டைற்றோனியம்.
30. □யாவற்றா□ (YAWATA) என்பது
i. ஆசியாவில் மிகப் பெரிய இரும்புருக்கு ஆலை.
ii. உலகிலேயே மிகப் பெரிய இரும்புருக்கு ஆலை.
iii. ஐ.அமெரிக்காவில் மிகப் பெரிய இரும்புருக்கு ஆலை.
iv. ஆசியாவில் மிகப் பெரிய கப்பல் கட்டும் நிறுவனம்
31. இலங்கையின் சிறு போக நெல் உற்பத்தி இடம்பெறும் பிரதான மாவட்டங்கள்
i. அம்பாறை, பொலன்நறுவை, குருநாகல்.
ii. அம்பாறை, குருநாகல், அநுராதபுரம்.
iii. அநுராதபுரம், குருநாகல், மட்டக்களப்பு.
iv. குருநாகல், அம்பாறை, யாழ்ப்பானம்.
32. இந்தியாவில் நகராக்கத்தில் காணப்படும் பிரதான பிரச்சினை எது?
i. சேரிப்புறங்கள் அதிகரித்தல் ii. போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுதல்
iii. நகரம் வெப்பமடைதல் iv. இயற்கைச் சூழல் பாதிப்படைதல்.
33. மோசாவ (Moshav) என்பது யாது?
i. இந்தோனேசியாவிலுள்ள குறைந்த வருமானக் குழுக்களின் குடியிருப்பு
ii. இஸ்ரேலில் காணப்படும் கருமையக் குடியிருப்பு.
iii. இஸ்லாமாபாத்திலுள்ள சேரிக் குடியிருப்பு.
iv. மேற்கு ஆபிரிக்காவில் காணப்படும் ஒரு தற்காலிக குடியிருப்பு.
34. போலாந்து, ஹங்கேரி, செக்குடியரசு, ஸ்லோவீனியா, லித்துவேணியா, லற்றியா, எஸ்ரோணியா, சைப்பிரஸ், மோல்டா, ஸ்லோவாதியா ஆகிய நாடுகளின் இணைப்பை குறிப்பிடும் பெயர்
i. G-8 நாடுகள் ii. புதிய EU நாடுகள்
iii. G-9 நாடுகள் iv. NIC நாடுகள்
35. பஸ்டி (Busstee) என்னும் பதம் பயன்படுத்தப்படுவது
i. எகிப்தின் சேரிப்பகுதிகளை விவரிப்பதற்கு
ii. ஷங்ஹாயின் சேரிப்பகுதிகளை விவரிப்பதற்கு
iii. கல்காத்தாவின் சேரிப்பகுதிகளை விவரிப்பதற்கு
iv. ஜகார்த்தாவின் சேரிப்பகுதிகளை விவரிப்பதற்கு
36. இந்தியாவில் மிக அதிக பெருநகரங்கள் (Metro) கொண்டுள்ள மாநிலம்
i. உத்தரப்பிரதேசம் ii. டில்லி iii. ஒரிசா iv. ஆந்திரப் பிரதேசம்
37. ஆடை ஏற்றுமதி வர்த்தகத்தில் இலங்கையின் பிரதான போட்டியாளராகத் தோன்றியுள்ள நாடுகள் எவை?
i. இந்தியா, பிரித்தானியா, இந்தோனேசியா, தாய்வான்.
ii. சீனா, பங்களாதேஸ், வியட்னாம்.
iii. பங்களாதேஸ், பாகிஸ்தான், தாய்வான், அமெரிக்கா.
iv. சீனா, பங்களாதேஸ், கொரியா, தாய்லாந்து.
38. இலங்கையில் புதிதாக உருவாக்கப்பட்ட ஐந்து புதிய நகர சபைகள்
i கஸ்பேவ, பெரலஸ்கமுவ, மன்னார், கிண்ணியா, எம்பில்லபிட்டிய
ii மன்னார், கிண்ணியா, எம்பில்லபிட்டிய, கல்கிசை, திருகோணமலை
iii பெரலஸ்கமுவ, திருகோணமலை, தெஹிவளை, கல்கிசை, கிண்ணியா,
iv பெரலஸ்கமுவ மன்னார், கஸ்பேவ, வவுனியா, நொச்சியாமம், மதவாச்சி
39. □**பொஸ்வாஷ்**" (Boswash) **என்பது.**
i. ஜப்பானிலுள்ள ஒரு மாபெரும் நகரம்
ii. ஐக்கியராச்சியத்திலுள்ள ஒரு மாபெரும் நகரம்
iii. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஒரு மாபெரும் நகரம்
iv. ஸ்கண்நேவியாவிலுள்ள ஒரு மாபெரும் நகரம்
40. ஐவு ஊயீவையட ழுகஐனெயை என அழைக்கப்படும் நகரம் எது?
1. மும்பாய் ii. பெங்களூர் iii. கல்கத்தா iv லக்னோ.

## பகுதி II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

(01) அ) அபிவிருத்தியடைந்த நாடுகளில் பிறப்புவீதம் குறைவடைந்து செல்வதற்குப் பொறுப்பான காரணிகள் யாவை.?
ஆ) இலங்கையில் பிறப்பு வீதம் குறைவடைந்து செல்வதற்கான காரணிகளை ஆராய்க.
இ) இலங்கையின் குடித்தொகையில் வயதுமுதிர்தல் தொடர்பான பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.

(02) அ) தரப்பட்ட உலகப் படத்தில் இறப்பர் உற்பத்தியில் ஈடுபடும் இலங்கை தவிர்ந்த ஆறு நாடுகளைக் குறித்துப் பெயரிடுக.
ஆ) இலங்கையின் இறப்பர் உற்பத்தி முன்னேற்றம் அடைந்துள்ளமைக்கான காரணிகளைக் குறிப்பிடுக.
இ) இறப்பர் வர்த்தக நடவடிக்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்க.

(03) அ) தரப்பட்ட உலகப்படத்தில் நாடோடி மந்தை வளர்ப்பு முறை இடம்பெறுகின்ற பகுதிகளைக் குறித்துப் பெயரிடுக.
ஆ) நாடோடி மந்தை வளர்ப்பு முறையின் பிரதான அம்சங்களை ஆராய்க.
இ) நாடோடி மந்தை வளர்ப்பு முறையின் அண்மைக்காலப் போக்குகள் பற்றிப் பரிசீலனை செய்க.

(04) அ) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வர்த்தக முறையான கடல்சார்ந்த மீன்பிடித்தொழிலுக்கு முதன்மைபெற்ற ஆறு மீன்பிடிப் பண்ணைகளைக் குறித்துப் பெயரிடுக.
ஆ) நீர் (அ) வில் குறிப்பிட்ட ஒரு மீன்பிடிப் பண்ணையில் பௌதீக அமைப்புகள், மனிதமுயற்சிகள் எவ்வாறு மீன்பிடி நடவடிக்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை ஆராய்க.
இ) மீன்பிடி முறையினால் குறைவடைந்து செல்லும் மீனினங்களைப் பாதுகாப்பதற்கு எந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(05) அ) இலங்கைப் படத்தில் சுற்றுலாத்துறைக்குப் பிரபல்யம் வாய்ந்த இடங்களான சிகிரியா, மிகிந்தலை, அனுராதபுரம், கண்டி, பொலன்நறுவை, ஹிக்கடுவை, பெந்தோட்டை, பேருவலை, நீர்கொழும்பு, கதிர்காமம் ஆகியவற்றைக் குறித்துப் பெயரிடுக.
ஆ) இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை பெற்றுள்ள முக்கியத்துவத்தை விவரிக்குக.
(இ) இலங்கையில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(06) அ) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வர்த்தக முறையான பாற்பண்ணைத் தொழில் வளர்ச்சி பெற்றுள்ள பிரதான ஆறு நாடுகளைக் குறித்துப் பெயரிடுக.
ஆ) நீர் (அ) வில் பெயரிட்ட நாடுகளில் ஒன்றைத் தெரிந்து அங்கு இடம்பெறுகின்ற வர்த்தக முறையான பாற்பண்ணைத் தொழிலின் வளர்ச்சிக்குப் பங்களித்த பிரதான காரணிகளை விவரிக்க.
இ) இலங்கையில் பாற்பண்ணைத் தொழில் நடவடிக்கையை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை?

(07) அ) ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து தலா இவ்விரு மோட்டார் வாகன கைத்தொழில் நடவடிக்கை இடம்பெறும் நகரங்களைக் குறித்துப் பெயரிடுக.
ஆ) இந்தியாவில் மோட்டார் வாகனக் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பங்களித்த பிரதான காரணிகளை விவரிக்குக.
இ) மோட்டார் வாகனக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

(08) அ) தரப்பட்ட உலகப்படத்தில் லத்தன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியாவில் பெற்றோலிய உற்பத்தியில் முதன்மை பெறும் இவ்விரு நாடுகளைக் குறித்துப் பெயரிடுக.
ஆ) அண்மைக் காலங்களில் பெற்றோலிய விலை உயர்வடைந்தமைக்கான காரணங்கள் யாவை?
இ) பெற்றோலிய விலை அதிகரிப்பு, பெற்றோலிய இறக்குமதி செய்யும் நாடுகளில் ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை? (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**விடைக் குறிப்புகள்**

## தமிழ் - I

**வெளியீடு 02**

திரு. **K.ஈஸ்வரன்** *B.A. Hons, Dip. in Edu.* - கொழும்பு

(ஆசிரியர் K. ஈஸ்வரனின் தமிழ் வினாத்தாள் 21.03.2006ஆம் திகதி வெளியாகியிருந்தது. அதன் விடைக்குறிப்புகள் இங்கு பிரசுரமாகின்றன.)

### பகுதி I

*01)*

I) அ) தலையசைத்து கம்பீரமாக நடந்து செல்லும் கொடிய களிற்றுப் படையையும். விரைந்து செல்லும் குதிரைப்படையையும் உடைய அஞ்சி என்னும் மன்னன் அன்புள்ளத்தோடு ஆராய்ந்து, தன்புகழ் நெடுங்காலம் நிலைத்திருக்குமாறு இரவலர்களுக்குத் தேர்களைப் பரிசளிக்க இருக்கும் நாளோலக்கம் போல, முகில் மழை பெய்யத் தொடங்கி விடாது ஒரு சீராகப் பெய்கின்றது. இப்பருவ காலத்திலே வருவோம் என்று கூறிய தலைவர் இன்னும் வரவில்லை. அதனால் தாங்குதற்கரிய துன்பத்தால் வருந்தி நான் உயிர் விடுதலே பொருந்தும். இறந்தொழிந்தால் நான் அவர் மீது அன்புடையோன் என்பதும் உண்மையாகும். அவ்வாறு இறந்தொழி யாமையினால் அன்பிலன் அல்லனோ? கரையை மோதிப் பாய்ந்து செல்லும் காட்டாற்றின் இடிந்த கரையிலே, வேர்கள் வெளிப்படப் பாறிக் கிடக்கும் அரச மரத்தின் அழகிய இளந்தளிர் போல நடுங்கும் உள்ளத்தோடு இப்பிரிவுத் துன்பத்தை எவ்வாறு தாங்குவேன்?

ஆ) பிரிவுத் துன்பத்தைத் தாங்கமுடியாத தலைவியின் சோகத்திற்குக் காட்டாற்றின் இடிந்த கரையிலே, வேர்கள் வெளிப்படப் பாறிக் கிடக்கும் அரச மரத்தின் இளந் தளிரை உவமையாகக் கூறுகின்றார்.

II) அ) சான்றோரின் நலமாவது அவருடைய குணநலமே ஆகும். அ∴து இல்லாத உறுப்பு நலம் வேறு ஒரு நலத்தினும் உள்ளது அன்று.

ஓர் உயிரையும் கொல்லாத அறத்தைக் கொண்டதே தவம், அது போல பிறர் குற்றத்தை எடுத்துச்சொல்லாத குணத்தைக் கொண்டதே சால்பு.

சால்புடையாமையாகிய கடலுக்கு கரை என்று சொல்லப்படுபவர். கடலும் கரையுள் நில்லாமல் வேறுபட்டாலும், தாம் வேறுபடாமல் இருப்பர்.

பிறர்க்குக் கொடுப்பதும், தான் நுகர்வதும் ஆகிய இரண்டு செய்கையும் இல்லாதவர்களுக்குப் பல கோடிப் பொருள்கள் உண்டானாலும் பயன் ஒன்றும் இல்லை.

ஆ) சால்புடைமையாகிய கடலுக்குக் கரையாக நிற்பர் என சால்புடையோர் உருவகிக்கப்படுகின்றனர்.

III) அ) கற்பு நெறியில் நின்று விலகிய மாதர்களின் குணமும் பொறுமையினின்றும் விலகிய தவ ஒழுக்கமும் விளங்குகின்ற கருணையின் வழிநின்றும் விலகிய, தருமமும்.

முன்னோர்களது முறைமையினின்றும் விலகிய ஆட்சியினும் முற்படுமோ? (தசரதச் சக்கரவர்த்தியின் மூத்த திருமகனாகப்) பிறந்ததிலிருந்தும், உன்னுடைய நீங்கத்தகாத தொன்றுதொட்டுவருகின்ற பதவியை விட்டு பெரிய தவத்தை செய்யத் தொடங்குவாய் என்றால் மறந்தாயினும் நீதி முறைமையினின்றும் வழுவி தருமத்தை வாளினாற் கொன்று தின்றானென்னு சொல்லுமாறு அவ்வர சாட்சியை ஆள்வேனோ?

ஆ) மூத்தவர்களுக்குரியதே அரசு என்னும் முன்னோர் முறைமையை நீக்கி அரசாட்சி செய்ய யான் முற்படுவேனோ என்றவாறு பரதனின் சிறப்பான மனப்பாங்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

IV)

அ) யாரோ வெளிவாயிற் கதவை அடைப்பதுங் கீழ்த்திசை முழுவதும் அதிரும் படியான சங்கின் ஓசையும் வம்புகள் பேசி சண்டை செய்யும் மக்களின் குரலி ஒலியும் குழந்தையின் அழுகுரலொலியும் ஆகிய பலதரப்பட்ட ஒலிகளைக் காற்றுகொண்டு வருகிறது. அக்காற்றில்லையேல் இவ்வொலிகளைக் கேட்க முடியுமோ? ஆகவே, மனமே! குளிர்ச்சி பொருந்திய நிலவைப் பொழியும் சந்திரனிடத்தில் பாய்ந்து சென்று அழகுத்தேனை உண்டு களிப்பாயாக.

ஆ) குளிர்ச்சி பொருந்திய சந்திரனின் மீது பாய்ந்து சென்று அழகுத் தேனை உண்டு களிப்பாய் என மனதிற்குப் பாரதியார் கட்டளை இடுவதாக இவ்வடிகள் அமைக்கப்படுகின்றன. அதாவது மனத்தின் கற்பனை செய்யும் இயல்பைக் கொண்டு நிலவைப் பாரதியார் இரசிக்கின்றார்.

02)

அ)

I) சமுதாயச் சுபீட்சத்திற்காக இன்னென்ன தொழில்களைச் செய்யுங்கள் ஆயிரம் தொழில், அனைத்துத் தொழில்களையும் செய்யுங்கள் என வேண்டுகிறார். உருக்கிடுவீரே, வகுத்தடுவீரே, பிழிந்திடுவீரே என வேண்டுகின்றார்.

II) தொழிலாளர்களைத் தேவர்களுக்கு ஒப்பிடுகின்றார். எல்லா நுகர் பொருள் களையும் படைத்தருளுபவர்கள் படைத்தல் தொழில் செய்யும் பிரம்மாக்கள் என்பது பாரதியாரின் முடிவு "பிரமதேவன் கலையிங்கு நீரே" என்ற வரிகள் இதற்குச் சான்றாகின்றது.

III) □இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே□ எனத் தொழிலாளரையும் □உண்ணக் கனி தந்திடுவீரே□ என உழவர்களையும் □பாட்டும் செய்யுளுங் கோத்திடுவீரே□ என கலைஞர்களையும் விளிக்கப்படுகின்றது.

IV) இந்நாட்டிலே தத்தம் தொழில் செய்வோர் தருமத்தைச் சேர்த்து வைத்தவராவர் எனப்பாடுகிறார். இன்பங்கள் சேர்த்து வைக்கும் தெய்வமாக விளங்கவேண்டும். வாழ்த்தும் தெரிவிக்கும் பாங்கு தொழில் மீதும் தொழிலாளர் மீதும் பாரதியார் கொண்டுள்ள மதிப்பைப் புரிந்துகொள்ள முடிகின்றது. தேடித்திரியாது கண்முன்னே தோன்றும் தெய்வம் என்று கூறியமை நயம்மிக்கது.

ஆ)

I) இலக்கணம், நிகண்டுகள், அகராதிகள், பதவுரைகள், விசேஷ உரை, விமர்சனங்கள் என்பவற்றின் மூலம் இலக்கியம், கவிதையின் உயிரைக்காண முயற்சிகள் எடுக்கப்பட்டன.

II) கவிதையைப் பதங்களாகப் பிரித்தும், நுண்பொருள் உரைத்தும், மேற்கோள், இலக்கண வரம்பு காட்டிப் பார்ப்பதனால் கவிதை உயிர் தங்காது இறந்து விடுகின்றது எனப்படுகிறது.

III) கவிதைகள் வேறு பல வகைகள் பிரித்துப் பிரித்து நுணுக்கமாகப் பொருளறி யப்படுகின்றன என்பதாகும்.

IV) இலக்கியங்கள், கவிதைகள் என்பன ஒரு சமூகத்தின் கண்ணாடி என்பதால் நாட்டு மக்களின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் கூட இது வழி வகுத்து விடுகின்றது. கலாசாரம், பண்பாடு என்பவற்றிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே இலக்கியங்களும் கவிதைகளும் உயிர்ப் பொருள்கள் போல் செயற்படுகின்றன என்பதாம்.

### பகுதி II

03)

அ) உணவும், உடையும் மற்றவைகளும் மக்கள் உயிர்களுக்கெல்லாம் பொது வானதாகும். ஆனால் நல்ல மக்களுக்கு நாணுடைமையே சிறப்பாகும்.

ஆ) சான்றோருக்கு நாணமாவது அணிகலம்.
பிறர் பழியையும் தம்பழியையும் ஒரு சேர மதிப்பவர். நாணத்திற்கு உறைவிடமானவர். உயர்ந்தவர். நாணமாகிய வேலியமைத்து வாழ்வர்.

இ) நாணம் சிதையாதிருக்க உயிர் துறப்பர், அதாவது நாணத்தைக் காப்பாற்ற உயிரை விடுவர். ஆனால், உயிரைக் காப்பாற்றுவதற்காக நாணத்தைத் துறவார்.

ஈ) நாணமிழக்க நடப்பவன் நன்மை எல்லாவற்றையும் கெடுக்கும். அவர் மரத்தால் செய்த பாவைக்கு ஒப்பாவர்.
குறிப்பு:- அவ்வவ் விடைக்குறிப்புகளுக்குப் பொருத்தமான குறளை எழுதி விளக்கப்படுமாயின் புள்ளிகள் முழுமையாக வழங்கப்படும்.

04)

அ) இலக்குமணா நீ ஏழேழு பதினான்கு உலகையும் கலக்குவன் என்பது உண்மை ஆனால் நான் சொல்வதையும் கேட்பாயாக.
நம் குலத்தில் உதித்தவர்கள் அறத்தினின்றும் நீங்கியவர்கள் அல்லர்
வேதத்திற்கு மாறான செயல் பரதனிடம் இராது.
பரதன் என்னிடம் வருவது என்மீதுள்ள அன்பினால் இராட்சியத்தை மீண்டும் தருவதற்காம் என்று நினை.
போர் செய்ய வருகின்றான் என்பது கூறத் தகுமோ.
தருமத்திற்கு மாறாகப் பரதன் படையெடுத்து வருவான் என்று நாம் நினைக்கலாமோ.

குறிப்பு:- 42 - 47 வரையான பாடல்களில் இலக்குவன் கொண்ட சீற்றத்தைத் தணிக்க அவனுக்கு உயர்வான அடைகள் கொடுப்பதை விளக்குக. அதன் பின் மேற்கூறிய கருத்துகளை எழுதுக.

ஆ) 60 - 66 வரையான பாடல்களில் இராமன் புலம்பல் எடுத்துக் கூறப்படுகின்றது. உவமை அணிகள் மூலமும் கூறப்படுகின்ற கருத்தைக் கூறுக.
"நந்தா விளக்கே................"
"பூமியிலுள்ளோர்க்குத் தந்தை போன்றவனே.............."
"தருமத்திற்கு தாயானவனே..........."
கூர்மையான வேலையுடையவனே தவத்தால் மேன்மைப்பட்டவனே
புத்திரகா மோஷ்டி யாகம் செய்து எம்மைப் பெற்றவனே.............. எனப் புலம்புதல்
உன்னைக் கொன்ற பின்பு உலகம் ஆளப் பொருந்தினேனோ
தவம் செய்யச் செல்லாது இறந்தது ஏனோ?
இராமன் தன்னைப் பழித்துக் கூறல்
நீ இறக்க நான் இறவாதிருப்பது என்ன கொடுமை
என்றவாறு இராமன் புலம்புவதை அழகு தமிழில் தொகுத்து எழுதுக.

இ) 70 - 79 வரையான பாடல்களில் வசிட்டன் தேற்றும் முறையைத் தொகுத்து எழுதுதல் வேண்டும்.
வேதங்களின் எல்லை கண்டவனே மரணமும், ஜனனமும் இயற்கை என்பதை மறந்தியோ.
உலகில் பிறந்த பல்கோடி உயிர்களும் இறப்பது நிச்சயம். யமனிடம் இரக்கம் உள்ளது என எண்ணுவது தவறு.
அறுபதாயிரம் வருஷம் ஆட்சிபுரிந்த மன்னன் இறக்க நீ வருந்தலாமோ?
மும் மூர்த்திகளாயினும் காலம் என்ற நியதியிலிருந்து தப்ப முடியாது.
உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் அழிவன. சாதாரண உயிர் பிரிந் ததற்காக நீ வருந்தலாமோ?
நல்வினையால் நியமித்த காலத்தில் நல்வினைகள் முடிந்தவுடன் இறத்தல் இயல்பே!
அவர் அவர் கர்மமே உயிர் புகுதல் பிரிதலுக்குக் காரணம் எனக் கூறல்.
எனவே திருக்கலியாண குணங்களால் தந்தையை நற்கதியின் சேர்த்தலே மைந்தற்குக் கடன் என்று வசிட்டன் நீர்க்கடன் செய்ய வருமாறு தேற்றுதலைத் தொகுத்து எழுதுதல் வேண்டும்.

5)

அ) நீ பல்வேறு கலைகளையுடையவன் என்று அறிந்தமையாலோ அல்லது பதினாறு கலைச் செல்வமுடையவன் என அறிந்தமையாலோ அழைக்கிறாள். அல்லது வண்டுகள் மொய்க்கின்ற மலர் மாலை அணிந்தவரும் அம்மையின் தந்தையுமான பாண்டியரது குல முதல்வனாய் நீ விளங்குகின்றாய் என்பதை எண்ணி அழைக்கிறாள். எம் தந்தையான சிவபெருமான் தமது நீண்ட சடைமுடியில் உன்னை மாலையாக அணிந்தமையைக் கருத்திற் கொண்டோ அழைக்கிறாள். அல்லது ஆழமான பாற்கடலிலே திருமகளோடு நீ கூடப் பிறந்தமையை நினைத்தோ உன்னை அழைக்கிறாள்.

ஆ)

1) பிறைச் சந்திரனாகத் தோன்றிய பொழுது, அம்பிகையின் நெற்றி அழகைக் கவர்ந்தமை.
2) பூரண சந்திரனானபோது முகவழகைக் கவர்ந்தமை.
3) மாற்றானாகிய கங்காதேவியோடு சிவபெருமான் திருமுடியில் இருந்தமை.

இ)

1) விண்ணில் விளங்கினால் இராகு கேதுவால் விழுங்கப்படுவான்.
2) சூரிய மண்டலம் புகுந்தால் ஒளிமழுங்குவான்.
3) சிவபெருமான் சடையை அடைந்தால் அங்குள்ள பாம்புகளால் அச்சமடைவான்.
4) ஊடல் காரணமாகத் தேவியால் உதைக்கப்படுவான்.

06)

அ) நாகம்மாள்
1) கணவனை இழந்த விதவை, குடும்பப் பொறுப்பு மிக்கவள்.
2) கணவனின் தம்பியான சின்னப்பன் குடும்பம் சிறக்க வேண்டுமென உழைத் தவள்.
3) பிறரது சொற் கேட்பவள்
4) நிலத்தைப் பிரித்துக் கேட்குமிடத்தில் நன்றி மறந்தவளாகவும், சின்னப்பனுக்குச் சவாலாகவும் விளங்குகின்றாள்.
5) கெட்டியப்பனுடனான தொடர்பு தவறான போக்கைக் காட்டுகிறது.
6) பிறரது குடும்ப விவரங்களை அறிய நினைப்பவள்.
7) பிறருக்கு அடங்காது ராணி போல் நடப்பவள்.
8) இறுதியில் சின்னப்பனின் உயிருக்கே உலை வைத்து விட்டாள்.

(தமிழ் - I இன் பகுதி II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 18.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org